தமிழ் நாட்டுக் கல்வெட்டுக்கள் - 17

திருவீழிமிழலைக் கல்வெட்டுகள்

தொகுப்பாசிரியர்
டாக்டர். ஆ. பத்மாவதி, எம்.ஏ., பிஎச்.டி.
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

பொறுப்பாசிரியர்
நடன. காசிநாதன், எம்.ஏ.,
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

UG4136
R007B04

வெளியீடு
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை-600 113
1994

தமிழ் நாட்டுக் கல்வெட்டுக்கள் - 17

திருவீழிமிழலைக் கல்வெட்டுகள்

தொகுப்பாசிரியர்

டாக்டர். ஆ. பத்மாவதி, எம்.ஏ., பிஎச்.டி.

கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

பொறுப்பாசிரியர்

நடன. காசிநாதன், எம்.ஏ.

இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

சென்னை-600 113

1 9 9 4

முதற் பதிப்பு-1994 (500 பிரதிகள்)
தொ. பொ. ஆ. துறை வெளியீடு எண் : 118

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

திருவீழிமிழலைக் கல்வெட்டுகள்

தொகுப்பாசிரியர்

டாக்டர். ஆ. பத்மாவதி, எம்.ஏ., பிஎச்.டி.

பொறுப்பாசிரியர்

நடன. காசிநாதன் எம்.ஏ.,
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

விலை : ரூ.

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

அணிந்துரை

ஒரு நாட்டினுடைய வரலாற்றை அறிந்துகொள்வதற்கு அந்நாட்டில் கிடைக்கக் கூடிய இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்புப் பட்டயங்கள், தொல்பொருட்கள், ஓலைச் சுவடிகள், காசுகள் ஆகியவை பெரிதும் துணை புரிபவைகளாகும். அந்த வகையில் தமிழ் நாட்டில் சுமார் 50,000 கல்வெட்டுகள் கோயில்களிலும், மலைப்பாறைகளிலும், குகை களிலும் தனிக் கற்களிலும் எழுதப்பட்டுக் காணப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அக்கல்வெட்டுக்கள் பண்டைத் தமிழ் எழுத்திலும், வட்டெழுத்திலும், பிற்காலத் தமிழ் எழுத்திலும் கிரந்தம், தெலுங்கு, கன்னடம், மராத்தி, நாகரி ஆகிய எழுத்துக்களிலும் எழுதப்பட்டுக் காணப்படுகின்றன. அவைகள் அனைத்தையும் படி எடுத்துத் தற்காலத் தமிழ் எழுத்தில் நூல்களாக வெளியிட வேண்டும் என்பது தமிழ்நாடு அரசின் திட்டம் ஆகும். அத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு, இத்துறை தமிழகம் முழுதும் காணப்பெறும் கல்வெட்டுக்களைப் படியெடுக்க வேண்டும் என்ற குறிக்கோளில், ஒவ்வொரு மாவட்டமாகக் கல்வெட்டு ஆய்வு செய்து அவ்வாய்வில் படி எடுக்கப்பட்ட கல்வெட்டுகளை மாவட்ட வாரியாக நூல்களாக வெளியிட்டு வந்தது. அவ்வாறு இதுவரை 16 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. மாவட்ட வாரியாக வெளியிடுவதில் காலம் அதிக மாக ஆகிறது என்ற காரணத்தினாலும், ஒவ்வொரு ஊரினரும் தங்களது ஊரில் காணப் படும் கல்வெட்டுக்களில் பொதிந்துள்ள வரலாற்று உண்மைகளை விரைவில் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுவதாலும், ஊர் வாரியாகக் கல்வெட்டுகளை வெளி யிடலாம் என்று இத்துறை முடிவு செய்து, முதல் தொகுதியாகத் தஞ்சை மாவட்டம் 'திருக்கோடிக்கா கல்வெட்டுக்கள்' என்ற தொகுதியை 1992-ம் ஆண்டு வெளியிட்டது. அதனையடுத்து இவ்வாண்டு தஞ்சை மாவட்டம் திருவீழிமிழலை என்னும் ஊரினைச் சார்ந்த கல்வெட்டுக்களைத் 'திருவீழிமிழலைக் கல்வெட்டுக்கள்' என்னும் பெயரில் வெளிக் கொணர்கிறது. இதில் சுமார் 101 கல்வெட்டுக்கள் அடங்கியுள்ளன. முதற் பராந்தகச் சோழன் காலம் முதல் மூன்றாம் இராஜேந்திர சோழன் காலம் முடிய சோழ மன்னர் களின் காலத்தியக் கல்வெட்டுகளும், பாண்டிய மன்னர்களில் முதலாம் ஜடாவர்மன் மற்றும் இரண்டாம் ஜடாவர்மன் ஆகியோர் காலத்தியக் கல்வெட்டுகளும், விஜயநகர மன்னர்களில் குமாரகம்பணன் காலத்தியக் கல்வெட்டும் ஆகும். இக்கல்வெட்டுக்கள் திருவீழிமிழலை பற்றியும், அது சோழர்கள் காலத்தில் எந்த நாட்டுப் பகுதியில் இருந்தது என்பது பற்றியும், அப்போது திருவீழிமிழலையில் என்னென்ன கோயில்கள் இருந்தன என்பது பற்றியும், அக்கோயில்களுக்கு யார் யார் எத்தகைய கொடைகள் வழங்கியுள்ளார்கள் என்பது பற்றியும் தெளிவாகத் தெரிவிக்கின்றன. அது-மட்டுமல்லாமல் அக்காலத்தில் நிலவிய சமுதாய வாழ்க்கை முறை பற்றியும் சிறப்பான முறையில் படம் பிடித்துக் காட்டுகின்றன.

மேற்காணும் கல்வெட்டுக்களில் ஊர்க்கல்வெட்டு எண் 31ன் மூலம் சில புதிய செய்தி களும் தெரிய வந்துள்ளன. குறிப்பாகத் "திருவீழிமிழலை உடையார்க்கு சாத்தி அருள திருக்கொள்கை செய்ய" என்று ஒரு செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் திருக்கொள்கை என்பது புதிய செய்தியாக உள்ளது. திருக்கொள்கை என்பது கவசமாக இருக்கலாம்

என்று ஊகிக்க முடிகிறது. ஊர்க்கல்வெட்டு எண். 42-ல் ''அமரபுஜங்கன் முப்புளியான கண்டருள்கண்ட பல்லவரையன்'' என்பவன் திருமழலை திருந்தான்தோன்றி மகாதேவர்க்குக் கொடை வழங்கியதாகக் கூறப்பட்டுள்ளது. அதில் கண்டருள் கண்டன் பல்லவரையன் என்றுக் குறிப்பிடப்பட்டிருப்பது ஒரு சிறப்புச்செய்தியாகும். ஊர்க் கல்வெட்டு எண் 92-ல் 'பட்டாலிவதி' என்று ஒரு வாய்க்காலின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பெயர் முதலாம் இராஜாதிராஜ சோழனின் அணுக்கியான பல்லவன் பட்டாலி நங்கை என்பவளின் பெயரால் ஏற்பட்டிருக்கலாம். இப்பட்டாலி நங்கை முதலாம் இராஜாதி இராஜ சோழன் காலத்தில் மிக்க செல்வாக்கு பெற்ற ஒருத்தியாகவும், அரசனுக்கு மிகவும் நெருக்கமானவளாகவும் காணப்பட்டதால் தான் இவள் அணுக்கி பல்லவன் பட்டாலிநங்கை என்று அழைக்கப்பட்டாள். அவள் உய்யகொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு திருவீழி மிழலை உடைய மகாதேவர் கோயிலுக்குப் பல கொடைகள் வழங்கி உள்ளது, இவ்வூர்க் கல்வெட்டு எண் 1-ல் இருந்து தெளிவாகத் தெரிகிறது. கோயிலில் நான்கு நாசிகளுக்கும், ஒரு நாசிக்குட்டத்துக்கும் சிகரத்துக்கும் பொன்னோடு மேய்வதற்கு இவள் கொடையளித் திருக்கிறாள். அதுமட்டுமல்லாமல் திருவீழிமிழலை உடையார்க்குச் சார்த்தி அருளுவதற் காக ஆபரணங்கள் செய்யவும் கொடையளித்து இருக்கிறாள். மேலும் இக்கோயி லில் சுப்ரமண்ய தேவர், கிராதார்ஜுனிய தேவர், ரிஷபவாகன தேவர், சண்டேசுவரர் ஆகியோருக்குச் சார்த்தி அருளுவதக்குத் திரு ஆபரணங்கள் செய்வதற்காகவும் கொடை யளித்து மகிழ்ந்திருக்கிறாள். அத்தகைய பெருமாட்டியின் பெயரால் வாய்க்கால் 'பட்டாலிவதி' என்று ஏற்படுத்தப்பட்டு இருப்பதும் உணர முடிகிறது. இதில் மற்றொரு சிறப்பு என்ன வென்றால் 'வதி' என்பதற்குப் பொருள் வாய்க்காலா? அல்லது வழியா? என்று அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவி வந்தது. அக்கருத்து வேறுபாட்டை நீக்கும் வகையில் இவ்வூர்க் கல்வெட்டு எண் 92-ல் ''பட்டாவதி என்னும் வாய்க்காலிலே விழவிட்டு'' என்று தொடர் காணப்படுகிறது. 'வதி' என்றால் வாய்க்கால் தான் என்பது இக்குறிப்பினால் உறுதியாகிறது. இவ்வாறு பல புதிய கருத்துக்களை உணர்த்துகின்ற இக்கல்வெட்டுக்கள் வரலாற்று ஆசிரியர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர் களுக்கும் கிடைத்தற்கரிய கருவூலங்களாகும்.

இக்கல்வெட்டுக்களை இத்துறையின் கல்வெட்டாய்வாளர்கள் திரு. பொ. இராஜேந்திரன் திரு. செ. போசு ஆகியோர் மேற்பார்வையில் அன்றைய கல்வெட்டுச் சிற்றெழுத்தர்களாகிய திரு. செ. இராமசாமி, திரு. இ. ஆறுமுகம், அன்றைய அலுவலக உதவியாளர்களாகிய திரு. மே. சீனிவாசன், திரு. இ. மதனகோபால் ஆகியோர் படியெடுத்து உதவியுள்ளனர். படிஎடுக்கப்பட்ட கல்வெட்டுக்களைக் கல்வெட்டாய்வாளர்கள் டாக்டர். ஆ. பத்மாவதி, திருமதி ஆர். வசந்தகல்யாணி ஆகியோர் படித்துள்ளனர். கல்வெட்டுக்களைப் பல முறை படித்து வரலாற்றுக் குறிப்பு எழுதி அச்சிடுவதற்குத் தயார் நிலைப்படுத்தி பதிப்பித்தவர் ஆ. பத்மாவதி ஆவார். மேற்காணும் இத்துறையின் அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கல்வெட்டுக்களை இத்துறையின் அச்சுப்பிரிவினைச் சார்ந்த திரு. முருகேசன், திரு. குப்புசாமி, திரு. கோவிந்தன் ஆகியோர் செம்மையாக அச்சிட்டுள்ளனர். அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

நடன. காசிநாதன்,
இயக்குநர்

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	36
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. - 1054
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	384 / 1908
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழும் கிரந்தமும்	ஊர்க் கல்வெட்டு எண்	1
அரசு :	சோழர்		
மன்னன் :	முதலாம் இராஜாதிராஜ சோழன்		

இடம் : திருவீழிநாதர் கோயில் உண்ணாழி வடபுறச்சுவரில் உள்ளது.

குறிப்புரை : இக்கல்வெட்டு முதலாம் இராஜாதிராஜ சோழன் காலத்தைச் சேர்ந்தது. விஜயராஜேந்திரதேவர் என இம்மன்னன் இக்கல்வெட்டில் கூறப்படுகிறான். இம்மன்னனது அணுக்கியார் பல்லவந் பட்டாலிநங்கை என்பவருட்பட பலர் இக்கோயிலுக்கு ஏராளமான பொன்னையும், அணிகலன்களையும் வழங்கிய செய்தியும், பொன் வேய்ந்த செய்தியும் மிக விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 இத்தேவற்கு யாண்டு 36 ஆவது உய்யக் கொண்டார் வள நாட்

2 டு வெண்ணாட்டுத் திருவீழிமிழலை உடைய மகாதேவர் கோயிலில்

3 . . . . மேய்விக்கிற உடையார் ஸ்ரீ **விஜையராஜேந்திரதேவர்** அணுக்கியார் பல்லவந் பட்ட[ாலி] நங்கை

4 யார்க்காய்ப் பொந் மேய்விக்கிந்ற இவர் தமையநார் பல்லவந் கயிலாயமாந உத்[த]ம சோழகங்

5 . . . . . இவர் தம்பியார் பல்லவரணுக்கநாந கங்கை கொண்ட சோழ மூவேந்த

6 . . . ரும் இவர் தம்பியார் படா . . . . யாழ . . . . . . நும் இவன் தங்கச்சி சூற்றி நார

த. க. — 17 — 1

7 ணந் உடையாளும் இவர் முதற்கணக்கு . . . . தேவநாந திருவீழி [மிழலை] . . . .

8 ணக்கு வேளாந் திருவையா[ற*]நாந மதுரை கொண்ட சோழ மாராயநும் . . . . உய்யக் கொண்ட சோழ

9 மாராயநும் பொந் மேய்விக்கையாலும் கங்கை கொண்ட சோழபுரத்து . . . கங்கை கொண்ட சோழ மடிகையில்

10 பா ஆச்சிரிக்கநும் கங்கை கொண்ட சோழப் பெருந்தெருவில் வியாபாரி ஆதித்தன் திருச்சிற்றம்பல முடையாநாந சோ . . . .

11 [ற்று] தீர்த்த நம்[பி*] செட்டியும் பொந் கெ[ா*] டையாலும் திருவீழி மிழலை ஸ்ரீ . . . . . . ஆரிதந் தாயந் சேந்தநும்

12 . . . . கண்காணி . . . . திருமா . . . . தாங்கலு . . . . .

13 . . . . ராயமாகவும் ஸ்ரீ . . . . க்குடலமாக . . . . . வெண்காடந் . . . . . .

14 த்தக ஸ்ரீ கோயிற் கணக்கர்[காக]வும்இத்திரு . . . . . . சூருடைக் கமல[ந்*]தாந்தோந்றி ஆந விண்ணிழி வி[மா]ந பொற்

15 கோயிற் பிச்சனும் . . றபந் அணுக்கநாந பொற் கோயில் மிழலை நாயகப் பிச்சநும் குமரந் அண்ணா

16 மலையாந் பொற்கோயில் திருப்பள்ளித்தாமப் பிச்சனும் மறைக்காடந் ஆடவலாநாந விண்ணிழி விமாநப் [பொற்]

17 கோயில் திருமிழலைத் தேவன்நும் கண்காணி ஆகவும் இக்கோயில் சிவப் பிராமணரிடய் பெற்பண்டாரி அ

18 ரையந் தேவந் சிங்கநாந ஐஞ்னூற்றுவ பட்டநும் பாடிலாக்கந் கூத்தநாந அந்நூற்றுவ பட்டநும் பொ[ற்]

19 [ப]ண் டா ரமாகவும் உடையார் கோயிலுக்குத் திருவீழிமிழலை **சபை** யாரிட்ட திருமெய் காப்பாரில் காரி குடையாந்

20 தவ[ங்]குழகநும் தேவந் மாணிக்க மாந திரு நந்தி பள்ளிப் பிச்சநும் கூத்தந் தேவநாந கற்றளிப் பிச்சநும். .

21 . . . . இவ்வூர் . . . . . தட்டாரும் . . . .

22 மாற்றும் மாற்றிலி அம்பலமும் கண்காணி ஆக திரு நாஸிகள் நாலும் நாஸிக் குட்டம் மூந்றும் சிகரமும்

23 **மத்துக்கீழ்வாயும்** மேய்ந்தபொந் . . இரண்டா[யி]ரத்து தொளாயிரத்து இருபத்தஞ்சி நாலும் சிறு தகடு இ

24 [ர]ண்டி நாலும் பொந் பதிநாலாயிரத்து ஐஞ்னூற்று எழுபத்து நாற்கழசுஞ் . . . . சூற்றியு **பந்த** மேய்

25 ந்த தகடு நாற்பத்தெட்டி நால் மூந்[றோடாகத்] தை[க்க] தகடு பதிநாறி நாலும் . . . . . மூந்றி நாலும் ஐங்க

26 ழுஞ்சோடு எட்டி நாலும் **பந்த** மேய்ந்த பொந் ஆயிரத்து நாநூற்று அறுபத்தி . . . . செப்பாணித்தலை சுருக்கி

27 மேய்ந்த பொன் நூற்று இருபத்து மூந்றும் . . . . . பதிநாறாயிரத்து ஒருப

28 * . . . .

29 * . . . .

30 காம் போதராயர் **மேய்ந்த** ஓடு ஒந்றிநால் பொன் ஐங்கழஞ்சும் பல்லவந் ஆறைக் காலந்

31 [வ]கை கொண்ட சோழக் காம்போதராயர் மேய்ந்த ஓடு மூந்றிநால் பொந் பதிநைங் கழஞ்சும்

32 . . தேவி மேய்ந்த ஓடு ஒந்றிநால் பொன் ஐங்கழஞ்சும் கோவிந்தந் அமுதந் மேய்ந்த பொந் ஓடு ஒந்றி

33 [னா]ல் பொந் ஐங்கழஞ்சும் திருவந் மாணிக்கம் மேய்ந்த ஓடு ஒந்றி நால் பொன் ஐங்கழஞ்சும் ஆக இ

34 [வர்] மேய்ந்த ஓடு ஏழிநால் பொன் முப்பத்தைங் கழஞ்சும் ஆக நாசிக்கை [நா]லும் நாசிக்குட்டம்

35 ஒன்றும் சிகரமும், பந்தமும் மேய்ந்த ஓடு இரண்டாயிரத்து தொளாயிரத்து நாற்பதும் பந்தத்தகடு [ப]தி

36 னாறும் வாசித்தகடு ஐஞ்சும் ஆக உரு இரண்டாயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தொந்றிநால் பொந்ப . . . .

37 * . . . .

38 மேய்ந்த பொந் பதிந் ஏழாயிரத்து இருநூற்று ஒருபத்து [ஐங்] கழஞ்சரையே மஞ்சாடி நாசிகளிலும் நாசிக் குட்ட [ங்க]

39 ளிலும் சிகரத்தும் பந்தத்தும் மேய்ந்த செம்பொந் இரண்டாயிரத்து தொளாயிரத்து நாற்பது பந்த தகடு

40 [பதி]நாறும் பாததகடு ஐஞ்சும் ஆக இரண்டாயிரத்து தொளாயிரத்து அறுபத்தொந்றிநால் வேய்ந்த இந்த செம்பொந்

41 ஐய்யாயிரத்தைஞ்ஞூற்று எழுபதிந் பலவரையும் மேய்ந்த செம்பொன் மூவாயிரத்து தொளாயிரமும் [மெ]

42 [ந்தலை] சுருக்கி மேய்ந்த செம்பாணி ஐய்யாயிரத்து முந்நூற்று எழுபத்தொந்பதும் ஆக மேய்ந்த ஆணி [எழுப]

43 தாயிரத்தறுநூற்று எழுபத்தொந்பதிநால் செம்பு நிறை முந்நூற்றறு பத்து முப்பலமும் குடம் மேய்ந்த செ

44 [ம் பொன்] ஐந்நூற்றுப்பலமும் ஆக மேய்ந்த செம்பு நிறை ஆறாயிரத்து முந்நூற்றுத் தொண்ணூற்று முப்பலமும்

45 திருவீழிமிழலை உடையார் சாத்தியருளும் திருவாபரணம் உடையார் ஸ்ரீ விஜை [ய] ராஜேந்த்ரதேவர் அணுக்[கி]

46 யார் பல்லவந் பட்டாலி நங்கையார் யாண்டு 32 நாள் 158 ணாலிட்ட கோசகம் இரண்டும் கொ[டு]க்கு ஒ[ன்]றும் பொந் நூ[ற்]

47 றுக் கழஞ்சேயாறு மஞ்சாடி எடராகம் . . . . இட்ட ஸ்ரீ பாத புஷ்பம் வகை மேய்ந்த பொந் நூ[ற்று]த் தொண்ணூ[ற்]

48 றொந்பதின் கழஞ்சேய் முக்காலே மஞ்[சா]டி யாண்டு 34 நாள் 52 நால் வரை பொந்நிந் செறு கீழ் நீர்ப்பூவாக செய்து சாத்[தி]

49 ந செங்கழுநீர்த் திருவாசியை ஒந்றி[ல் சாத்] திந பொற் பூ ஒன்று இதட்க்கு ஆறும் மொட்டொந்றும் [பொந்] முக் கழஞ்சே

50 . . . செய்து சாத்திந செ[ங்]கழுநீர்ப் பொற்பூ நாநூறும் இத்திரு வாசியையில் கீழ் விளிம்பில் குத்திந . . . பொற்பூ ஒந்று

51 . . கழஞ்சாக வட்டப் பொற்பூ முப்ப[து]ம் இத்திருவாசியையில் [செறுக] திருமாந்தளிர் இதட்க்கு பதிநாறும் . . .

52 . . . . . [உள்படபொந்] ஆயிரத்து நாநூற்று இருபத்தைங்கழஞ்சே ஏழுமஞ்சாடி [யிரண்டு] குந்றி இவை

53 * . . . . குத்திந செப்பாணி

54 * . . . .

55 நால் பொன் நிறை பதின்நாறு கழஞ்சேய் முக்கால[ால்] திருப்பள்ளிக் கட்டில் நம்பிராட்டியார்க்கு நாள் எண்பத்தா

56 றிநால் மேற்படியார் செய்திட்ட ஒப்பக் காறை ஒந்று இதநுள் நடுவு வைத்து விளக்கிந தாலி உள்ப்படப் பொந் கழஞ்சு . . . . . .

57 [ம்] உள்ளால் நின்றருளிந தேவற்கு யாண்டு 32 நாள் எட்டிநால் மேற்படியார் செய்திட்ட திருக்கைக்காறை இரண்டிநால் [எண்]

58 பதிந் ஒரு கழஞ்சேய் முக்காலே [ந]ாலு மஞ்சாடி இவர் நம்பிராட்டியார் சாத்தி அருள இவர் யாண்டு 32 நாள் எட்டி நால் (இறு)

59 இறுக்கிந திருக்கைக் காறை இரண்டிநால் பொந் எழு கழஞ்சேய் மு[க்கா]ல் மிழலை நாயக தேவற்கு சாத்தி அருள இவரே யாண்டு

60 31 ஆவது நாள் நூற்றைம்பத்தேழிநால் இவரே இட்ட பொற்பூ நாற்பதிநால் பொந் நூற்றுத் தொண்ணூற் றெண் கழஞ்சே

61 * . . . .

62 உட்படப்பொந் முப்பத்தொந்பதிந் கழஞ்சு நாளது மகரதோரணம் செ

63 ய்விக்க பொந் நூற்றித் தொண்ணூற்றொரு கழஞ்சரையே மஞ்சாடியும் இத

64 ந் இரண்டு பக்கமும் . . . . . நாற்றிந பொற்தகடு எட்டிநால் பொந் ஐங்கழஞ்சேய் இரண்டு மஞ்சாடியுங் குந்றியும் ஆக இத்

65 தோரணம் மேவிந பொந் நூற்றுத் தொண்ணூற்றறு கழஞ்சரையே மூந்று மஞ்சாடியுங், குந்றி இவர் நம்பிராட்டியார் சாத்தி அருள இ

66 வரே இட்ட கம்பி இ[ர]ண்டி நால் செம்மை பொந் முக்காலே மூந்று மஞ்சாடியும் எட்டுமா இவன் இட்ட [எட்டு] . . யாண்டு 33 ஆவது

67 . . . . கழஞ்சேய் முக்காலேயிரண்டு மஞ்சாடி யுங் குந்றி இவர் த[ா]

68 [ம்] எழுந்தருளிந *[ஸுப்பிரம]*ண்ய **தேவற்கு** சாத்த என்று யாண்டு 30 ஆவது செய்த . . .

69 இரண்டும் பொந் கழஞ்சே ஏழு மஞ்சாடியும் ஆறும் **கிராதார்ஜுநிய** தேவர் சாத்தி அருள யாண்டு 32 [நாள் நூற்றைம்பத்தே]

70 ழிநால் இவரே [இட்டு மிநுக்கிந] திருக்கைக் காறை இரண்டும் மிநுக்கிந திருவடிக் காறை இரண்டும் . . . . கழஞ்சேய் . . . இவர்

71 நம்பிராட்டியார்க்கு மேற்படியார் யாண்டு 32 நாள் [நூற்றை] ம்பத்தேழிநால் இட்ட ஒப்பக் காறை ஒந்று இதிலிட்ட . . . . . மிநு

72 க்கிந தாலி உள்பட பொந் கழஞ்சரையே மூந்று மஞ்சாடியும் ஆறு மாவும் **வ்ரிஷப வாகந** தேவர்கு . . . . யாண்டு 3[2] நாள் நூற்றைம்

73 பத்தேழிநால் இட்ட திருக்கைக்காறை இரண்டு . . . . . காறை இரண்டும் பொந் ஒந்பதிந் கழஞ்ச[ரை]யே இரண்டு [மஞ்சா]டியு

74 . . . . ஆவது இட்ட மிநுக்கிந திருக்கைக்கா[றை] இரண்டு திருவடி காறை

75 இரண்டும் பொந் . . . . . . **சுப்ரம**ண்யர்க்கு சாத்தி அருள இவரே இட்ட பரியந்சிய் மணித் திருக்கை ஒந்

76 றும் திருவடிக்காரை நந்த . . . .

77 பொந் இரு கழஞ்சி நால் செய்திட்ட மிநுக்கிந காறை ஒந்று

78 பொந் ஒருபதிந் . . . பொந் ஏழு மஞ்சாடியும் குந்றி இவற்கே செ

79 ய்து யாண்டு 30 நாள் 35 ஒந்று பொந் நாற்கழஞ்சு சண்டே

80 **ஸ்வர** தேவர்க் காறை இரண்டும் பொந் ஐங்கழஞ் சேய்

81 இரண்டு . . . . . திருவடிக்காறை இரண்டும் பொந் ஐ

82 ங்க . . . . யாண்டு 33 நால் இட்ட திருக்கை காறை

83 இரண்டி நால் பொந் . . . . சாத்தி . . . . .

84 . . . . இவரே இட்ட மி

85 நுக்கிந சண்பங்காறை ஒந்று செ[ய்து] இவரே இட்ட கம்பி யிரண்டி நால் பொந் முக்காலே

86 ல நாலு மஞ்சாடியும் குந்றி இவர் . . து செய்திட்ட திருவபிஷேகம் ஒந்று பொந் [நூற்று]

87 நாற்பதிந் கழஞ்சரையே இரண்டு . . . . . [இ]வர் அணுக்கியார் பல்லவந் பட்டாலி நங்கையாராகச்

88 செய்[த] செப்பு பிரபை மேற்படி . . செய்திட்ட காற் காரை இரண்டி நால் பொந் பதிந் ஒரு

89 கழஞ்சரையே மஞ்சாடியும் இரண்டு . . . . கால் இரண்டி நால் பொந் ஒந்பதிந் கழஞ்சேய்[கால்]நா

90 ளது இவரே செய்த கள்ளிப்பூவும் அரசிலையும் இடு கண்ணும் கொக்குவாயும் உட்பட

91 பொந் பதிநாற் கழஞ்சே யிரண்டு மஞ்சாடி . . . இவரே இட்ட மிநுக்கிந ஒப்பக்காறை ஒந்று இதின்

92 . . . . . இட்டபொந் ஒரு கழஞ்சேய் முக்கால் . . . .

93 ந்றி நாளது இவரே இட்ட [இராசேந்திர சோழந் கள்ளிப் பூ விரண்டி நால் பொந் கழஞ்சு[நாள்] இரு நூற்றெண்பத்[தைஞ்சிந]ால் இவரேய் செய்திட்ட பா —

94 கம்பி இரண்டிநால் பொந் [ஐ]ங் கழஞ்சு

---

* இக்குறியிடப்பட்ட இடங்களில் கல்வெட்டு வரிகள் சிமெண்ட்டால் பூசப்பட்டு மறைக்கப் பட்டுள்ளன.

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு	24
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு	கி.பி. 1094
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	383 / 1908
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	2
மன்னன் :	முதலாம் குலோத்துங்கச்சோழன்		

இடம் : திருவீழிநாதர் கோயில் உண்ணாழி வடபுறச்சுவரில் உள்ளது.

குறிப்புரை : முதலாம் குலோத்துங்கச் சோழனின் இருபத்து நான்காம் ஆட்சியாண்டில் இவ்வூர்க் கோயிலிலே மஹாசபை உறுப்பினர்கள் கூட்டங்குறைவறக் கூடியிருந்து உடன்படிக்கை செய்த செய்தி கூறப்பட்டுள்ளது. தற்போது உள்ள வருவாய்ப் பற்றாமையில் மேலும் சில காசுகளை ஆடவல்லான் கங்கை கொண்டானான இருக்கோளந் என்பனிடமிருந்தும், கோயில் கருவூலத்திலிருந்தும் பெற்றுக் கொண்டு இறையிலி செய்து கொடுத்த செய்தி காணப்படுகிறது. இக்கல்வெட்டு இடையிடையே மிகவும் சிதைந்த நிலையிலுள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ புகழ் சூழ்ந்த புணரி அ[கழ் சூழ்ந்த புவியில் பொ]ன் நேமி அளவுந் தன்[நேமிந]டப்ப விளங்கு சயமகளை இளங்கோப் பருவத்து சக்கர கோட்டத்து விக்கிரமத் தொழிலால் புது[மணம்பு]ணர்ந்து மதுவரை ஈட்டம் வயிராகாரத்து வாரி அயிர் முனைக் கொந்தள [வரசர் தன்]

2 தளமிரிய வாளுறை கழித்துத் தோள்[வலிகாட்டிப் போர்ப்பரி நடாத்திக் கீர்த்தியை நிறுத்தி வடதிசை வாகை சூடித் தென்னிசை] [தே]மருக [மலப்]பூ மகள் புதுமையும் பொந்நி ஆடை நன்னிலப் பா[வை] . . . தவிர வந்து பநிந்த முரிமையிற் சூடித் தன்னடி யிர

3 [ண்டும் தட முடியாகத் தொன்னில வேந்தர் சூட முன்னை] மநுவாறு பெருகக் கலியாறு வறப்பச் செங்கோல் திசை தொறுஞ் செல்ல வெண் குடை இருநில வளாக மெங்கணும் . . . .

4 . . . . [பொங்கொளியா] முந் திருப்புயத்தலங் கலும் . . . . உலகுடை யாளிருப்ப அவளுடன் கங்கை வீற்றிருந் தென மங்கையர் திலகம் ஏழிசை வல்லி ஏழுலக முடையாள் [வாழிகை மலர்ந்]தினிதிருப்ப ஊழியும் . .

5 சக்கரவர்த்திக[ள்] ஸ்ரீ கொ[லோத்]துங்க சோழ தேவர்கு யாண்டு உய[ச] ஆவது உலகுய்யக் கொண்ட சோழ வள நாட்டு வெண்ணாட்டு ப்ரமதேயம் திருவீழிமிழ[லை ம]காசபையோம் இவ்வாட்டையும் ரிஷப நாயற்று பூர்வபக்சத்து அஷ்டமியும் [ெ]பற்ற . . . .

6 நாள் எம்மூர் . . . . கோயிலிலெ **க்ராம** காரியமிட . . . . க்கு கூட்டக் குறைவறக் கூடி இ[ரு]ந்து பணித்த எழுத்[து] நம்மூர் . . . . கண்டு பெருங்க்கற்றிடி . . . . போயும் போகச் சேதமாயும் இறை பற்றா [மை] யில் **சபைப்** பொது பக்கல்

7 . . . . இறையிலி செ[ய்*]து குடுத்தும் இறை போக . . . யாக **விவஸ்தை** பண்ணின இடத்து கொலோத்துங்க சோழ வளநாட்டு செற்றூர்க் கூற்றத்து அண்ண வாயிலுடையாந் அணிய தேவன் காராணைவிட . . . .

8 . . . . இவ்வூரில் . . . . . . தேவ . . . . அமுது செய்விக்கைக்கு [மட] ப்புறமாக நிலங் கொண்டு இறையி[லி செய்து] ஆட [வல்லா] ந் கங்கை கொண்டாநான இருங்கோளர் பக்கலே சில காசு இரந்து கொண்டு . . . .

9 . . . . ஆதிசண்டேசுவரதேவர் ஸ்ரீபண்டாரத்தே பண்டாரமாக . . . . காசு கொண்டு மடப்புறமாக நிலம் [விற்று இறை]யிலி செய்து தந்தருளுவியோளோ வென்று **சபை** யொம் இத்திரு வீழி மிழலை . . . க்கட . . . .

10 . . . . ய்யக் கடவோம் **சபையோ**முக்கு **சபைப்** பொதுவாய்க் கிடந்த நிலங்களில் குந்தவை வதிக்குக் கிழக்கும் ராஜராஜ வாய்க் கா[லு]க்கு வடக்கு மூந்றாங் கண்ணாற்று மூந்றாஞ் சதுரத்துக் கிழக் கடைய . . . .

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	2
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1120
ஊர் :	திருவீழிமிழலை		
மொழி :	தமிழ்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	387 / 1908
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்		
மன்னன் :	விக்கிரமசோழன்	ஊர்க் கல்வெட்டு எண்	3

இடம் : திருவீழிநாதர் கோயில் உண்ணாழி வடபுறச் சுவர்

குறிப்புரை விக்கிரமசோழனின் இரண்டாம் ஆட்சியாண்டில் திருவீழிமிழலை உடையார் கோயிலுக்கு திருநொந்தா விளக்கெரிக்க நித்தவினோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து ஆவூருடையான் வேளான் செந்தாமரைக் கண்ணனும் மற்றொருவரும் பதினாறு காசுகளைக் கோயிற் கருவூலத்தில் சேர்த்த செய்தியும், பின்னர் அக்காசுகளை இக்கோயிலைச் சேர்ந்த சிவபிராமணர்கள் பலரும் பெற்றுக் கொண்டு அதற்கு ஈடாக ஒவ்வொரு நாளும் உரி நெய்யால் இரு திருநொந்தா விளக்குகள் எரிக்கச் சம்மதித்து உடன்படிக்கை எழுதித்தந்ததும் கூறப்படுகிறது

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யாண்டு 2-ஆவது உய்யக் கொ

2 ண்டார் வளநாட்டு வெண்ணாட்டு உடையார் திருவீழிமிழலை உடையார்

3 கோயிலில் சிவப்பிராமணரோம் ஆத்ரியன் சூரியன் நின்றானேனும் இக்குடி அட

4 ங்கல் விழிகொண்டானேனும் இக்குடி மிழலை நாய[கன்] திருவேகம்ப னேனும் இக்குடி மிழ

5 லை நாயகனா . . . . . ங்கனேனும் இக்குடி வெண்காடன் தேவன் ந[ா*]யகனேனும் மடபளி

6 கூத்தன் திருநல முடையானேனும் இக்குடிக் கூத்தந் நக்கனேனும் இக்குடித் திருவாய்மூர்

7 மிழலை வேந்தனேனும் இக்குடிக் கோலமார்வன் தேவனேனும் வாச்சியன் நல்ல [தகூர்]

8 சோழ பாண்டியனேனும் பாரதாயந் ஸ்ரீமருது பண்டிதனேனும் கவிசியன் திருநலத்து

9 . . திருச்சிற்றம்பல முடையானேனும் கவுசிகன் சோதி கல்லியாணந் நாயகநேனும் உள்ளிட்ட

10 **சிவப்ராஹ்ம**ணரோம் இத்தேவற்கு **சந்த்ராதித்த**வற் இரண்டு திரு **நுந்தா** விளக்கு நித்தம் உரிய்

11 நெய்யால் எரிக்க நாங்களும் எங்களில் மேற்படியாரும் எரிக்கக் கடவோமாக (இக்கோ)

12 இக்கோயிலில் திருப்[ப]ணி செய்து இக்குடி [கவிசியன்] அண்ண வாயி லுடையான்

13 * . . . .

14 [கள்] கண்காணிப்படியும் நித்த வினோத வளநாட்டு ஆவூர்க்கூற் றத்து ஆவூருடையான் வே

15 ளான் செந்தாமரைக் கண்ண நாந . . . . இருவரும் இக்காசு பதினாலுங் கொ[ண்*]டு போந்து ஆதி

16 சண்டேஸ்வர தேவர் ஸ்ரீ பண்டாரத்தே ஒடுக்கி[ன காசு] 16 இக்காசு பதினாறும் ஆதி சண்டே

17 **ஸ்வ**ர தேவர் பக்கல் ஒடுக்கின நாளோபாதி இத்திரு நுந்தா விளக்குச் **சந்த்ராதித்த**வற் எரி

18 க்கக் கடவோமாக சம்மதி[த்*]தோம் இவ்வனைவோ[ம்*] இக்கோயில் கணக்கு வெங்

19 கோவன் தாந்தோன்றி தேவ [ன்] எழுத்து

20 . . . . . . யெ இவரிட்டது ஆத்திரையந் மிழலை நாயகன் அடங்கல் விழி

21 . . . . ட்டனும் ஆத்தரையன் சிவஞ்ஞா

22 . . . . . ண்ண . . . . . . யான் அ[ஞ்]னூற்றுவ பட்டனும் மாடலன் கோலமார்வன் மருதிப்

23 . . . . ராஜேந்தி[ர]சோழ பட்டனும் மாடலன் மிழலை வேந்து பெரிய

24 திரைம்மூர்பட்டநும் . . தான் பெரியான்மருத நான திருவலஞ் சுழி பட்டனும் கோ

25 யில் பிரியான் மிழலை வேந்தரன் சந்திரசேகர பட்டனும் கவிசியன் திரு . . . .

———

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	5 - ஆம் ஆண்டு
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1123
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	388 / 1908
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	4
மன்னன் :	விக்கிரமசோழன்		

இடம் : திருவீழிநாதர் கோயில் உண்ணாழி வடபுறச் சுவர்.

குறிப்புரை : விக்கிரம சோழனின் ஐந்தாவது ஆட்சியாண்டில் வேளான் செந்தாமரைக் கண்ணநாந காங்கயராயன் என்பவன் திருவீழிமிழலை மஹாசபையோரிடம் வேண்டிக் கொண்டதற்கிணங்க மஹாசபையோர் திருவிழிமிழலை உடையாருக்கு அழுது செய்தருளவும் உச்சிசந்தி திருமந்திரபோனகத்துக்கும் இரவுசந்தி திருமந்திர போனகத்துக்கும் அமுது செய்தருளவும் தத்தமங்கலம் என்ற பெயருள்ள நிலத்தை இறையிலி செய்து கொடுத்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஶ்ரீ பூமாது புணர புவிமாது [வளர] நாமாது விள

2 ங்க ஜயமாதுவிரும்ப தந்நிரு பதமலர் மன்னவர்சூட மன்னிய உரிமை

3 [யால்] மணிமுடிசூடி செங்கோல்சென்று திசைதோறும்செல்ல வெங்கலி நீங்க மெ[ய்]

4 யறந்தழைப்பக் கலிங்கமிரியக் கட[ல்*]மலைநடாத்தி வலங்கோளாழி வரை [ஊழி] நடாத்தி

5 இருசுடரளவும் ஒரு குடை நிழற்றி வீரசிங்காஸநத்து முக்கோக்கிழாநடி களோடு [ங்]

த. க. — 17 —4

6 வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி பன்ம[ரான] **த்ரிபுவனச்சக்ரவத்திகள்** [ஸ்ரீ விக்கிரம] சோழ தேவற்கு

7 யாண்டு அஞ்சாவது உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு **ப்ரம[தேயம்]** திருவீழி

8 மிழலை மஹாஸபையோம் நித்தவினோத வளநாட்டு ஆவூர் கூற்றத்து ஆவூருடையான் வே

9 வளான் செந்தாமரைக்கண்ண நாந காங்கயரா[ய*]ன் உடையார்திருவீழி மிழலை உடையார்[க்கு] அமுது செ

10 சய்தருளுகைக்கு உச்சிசந்தி திருமந்திரபோனகத்துக்கும் இரவை **ஸந்தி திருமந்திர** போனகத்துக்கும்

11 அமுது செய்தருளுகைக்கு இறையிலியாக நிலம்விடவேணுமென்று வேண்டிக்கொள்ள நா

12 ங்கள் இறையிலிவிட்ட நிலமாவது தத்தமங்கலமாய் நாங்கள் குடுத்த நிலத்துத் . . .

13 . . . . . . மேக்கு . . . . . . வாய்க்காலுக்கு தெற்கு . . . . ங்கண்ணாற்று முதல் . . . . . .

14 ழக்கடைய நிலம் வேலி [இந்நிலம்] வேலியும் சத்திராதித்தவற் இறையிலியாகவும் சில்வரி பெ

15 [ருவ]ரியும் திருவாசலில்[போ]ந்தகுடிமையும் வெட்டிமுட்டையாளும் இப்பேர்ப்பட்ட இறை

16 யும் நாங்களே இறுக்கக்கடவோமாகவும் இப்படி திருவீழிமிழலை உடையார் கோயிலில் எழுந்த[ரு]

17 ளி இருந்த **ஆதிசண்டேஸ்வரதேவர் ஸ்ரீஹஸ்தத்து** நீர்வார்த்து **சந்திராதித்தவற்** இறையிலியே செல்லக் க[ட]வ

18 தாக இறையிலி செய்து குடுத்தோம்ஆதிசேண்டஸ்வரதேவர்க்கு **மகா சபையோம்** இப்படி கல்லிலும் செம்

19 [பிலும் வெட்டிக்] கொள்ளப்பெறுவர்க[ளா]கவும் இப்படிசம்மதித்து (இப்படி சம்மதித்து) இறையிலி செ[ய்*]து குடுத்தோம் உ

20 . . . . கு திருவரங்கமுடையான் பட்டன் . . . . . .

21 ந்திரசேகரநார் பணியாலும் கௌதமன் வடுகன் தில்லைக்கரசநார் பணியாலும் உலோச்சிய[ன்] நாராயண . . .

22 பணியாலும் கவுணியன் [வீ]ரசோழன் சங்கவியனார் பணியிநாலும் ஆரிதன் சுவரந் திருவரங்க பட்ட[னும் க]

23 வுணியன் சேந்தன் வீரட்டநார் பணியாலும் ஆரிதன் ஸவர்கத[ந்*] பணியாலும் உலோச்சியன்

24 பணியாலும் ஆரிதன் நீலந் உய்யக் கொண்டார் பணியாலும் மாடலன் கூத்தாடுவான் நாராய

25 [ணன்] உலோச்சிய[ன்*] சங்கரநாராயணநப்பூதி பணியாலும் உலோச்சியன் நாராயணன்தாயநார் ப[ணியாலும்] கவுதமன்

26 பணியாலும் ஆரிதன் தாசன் தில்லைக்கரசிநார் பணியாலும் கவுதமன் ஆராவமுது கோவி . . . பணிய

27 [ாலும்] கொண்டு இந்நிமந்தம் [செ]லுத்தக் கடவான் பொன் மண்டபப் பிச்சந் தன் விழி கூத்த . . . . . .

28 * ... ...

29 * ... ...

---

* இக்குறியிடப்பட்ட இடங்களில் கல்வெட்டு வரிகள் சிமெண்டால் பூசப்பட்டு மறைக்கப் பட்டுள்ளன.

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு	5
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு	கி.பி. 1123
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	389 / 1908
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	5
மன்னன் :	விக்கிரமசோழன்		

இடம் : திருவீழிநாதர் கோயில் உண்ணாழி வடபுறச் சுவர்

குறிப்புரை : விக்கிரமசோழனின் ஐந்தாவது ஆட்சியாண்டில் வேளான் செந்தாமரைக் கண்ணனான காங்கயராயன் என்பவன் வேண்டிக் கொண்டதற்கிணங்க திருவீழிமிழலை மஹாசபையோர் உள்ளூர் பிராமணருக்கு உணவளிப்பதற்கு இறையிலியாக நிலம் கொடுத்த செய்தி குறிக்கப்படுகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழதேவற்கு யாண்டு 5வது உய்யக்கொண்டார் வளனாட்டு வெண்ணா

2 ட்டு ப்ரஹ்மதேயம் திருவீழிமிழலை மஹாசபையோம் நித்[தவி]நோத வளனாட்டு ஆவூர்க்கூற்றத்து ஆவூருடையாந்

3 வேளான் செந்தாமரைக்கண்ணநான கங்கையராயந் [வே]ண்டிக் கொள்ள இவ்வூர் ப்ராஹ்மணற்கு [வை]த்தக் கலமா

4 க பத்துக்கலம் இவ்வுள்ளூர் செந்தாமரைக்கண்ணன் சாலையிலே உண் கைக்கு இறையிலியானநிலம் இடவே

5 ண்டிக்கொள்ள னாங்கள் இறையிலி இட்ட நிலமாவது னாங்கள் குடுத்த தத்தமங்கலத்தில் திருவெண்

6 . . . . சதி[ர]த்து ரூ ந்ரு **பிர** . . . . கிழக்கடைய திருவீழிமிழலை உடை

7 யார்க்கு அமுது செய்தருளுகைக்கு திருமந்திரபோநகத்துக்கு விட்ட . . . .

8 ற்கு ரூ . ௨ இன்[னி]லம் அரையே இரண்டு மாவும் இங்கே சந்ம் சதிரத்து . . . . . ந்ரு ௩ இ

9 தில் கிழக்கடைய ரூ . ௩ இந்நிலம் அரையே மூன்று மாவும் ஆகநிலம் ந்வ இந்நிலம்

10 ஒந்றேகாலும் இறையிலி செய்து நித்தம் கலம் பத்தும் உள்ளூர் **ப்ராஹ் மணரை** உண்

11 கைக்கு **சந்த்ராதித்தவற்** இறையிலிசெய்துகுடுத்து இந்நிலத்தால் வந்த குடிமையும் பெருவரி சி

12 ல்வரியும் திருவாசலில்போந்தகுடிமையும் வெட்டிமுட்டையாளும் மற்றும் எப்பேர்ப்பட்டி

13 [துவும்] நாங்களே இறுக்கக் கடவோமாகவும் இக்கலம் உள்ளூர் **ப்ராஹ்ம** ணன் உண்ணக் கடவார்களா

14 கவும் இறையிலி செய்துகுடுத்தோம் மகாசபையோம் **மகாசபை** . . . .

15 திருவரங்கமுடையாந்பட்டந் **அக்னிசித்தன்** பணியாலும் **கௌதமந்** வடுகந் . . . .

16 கன் பணியாலும் ஆரிதந்சுவரந் **சந்திர**சேகரநார்பணியாலும் **கௌதமந்** வடுகந் தில்லைக்[கர]

17 சிநார் பணியாலும் உலோச்சியந் நார[ா]யணந் உய்யநின்றாடியார் பணியாலும் கௌவுணிய

18 ந் சுந்தரசோழந் சடங்கவியார் பணிஇநாலும் ஆரிதன்தந்தகே **சுவக்ர** தந் பணி[யினாலு]ம் வாச்சியந் ஆ

19 [ல]ங்கிழார் **சபாசி**ரனார் பணியினாலும் ஆரிதன்நீலன் உய்யக்கொண் டான் பணியினாலும் ஆரிதன்சீரிளங்கோ [தா]

20 ஸர்[சுவரனார்] பணியினாலும் மாடலந் கூத்தாடி சங்கரநாராயணநார் பணியிநாலும் உலோச்சியந்நாராயணன் பணி . . . .

21 . . . . நாயகநார் பணியிநாலும் கௌவுதமந்ஆராவமுது கூத்தநார் பணியிநாலும் ஆரிதன்நீ[ல]

22 ன்நீலநார் பணியினாலும் ஆரிதந்நாகந் தில்லைக்கரைசிந்நார் பணியிநாலும் கௌதமன்ஆராவமுது கோலவிழியர் பணியிநாலு

23 ம் இந்நிலங்கொண்டு இந்நிமந்தம் செலுத்தக்கடவான் நவிரை ஆரிதந் திருவரங்கபட்டநும் இவந்வங்சத்தா

24 ரும் ஆகப் பணிப்பணிஆல் ஊர்க்கணக்கு திருமிழலை உடையாந் வாசுதேவன்

25 உதயஞ் செய்வாந் எழுத்து

த. நா. தொ. ஆய்வுத்துறை | தொடர் எண் : **514 / 1977**

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	6
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. - 1124
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	382 / 1908
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு	6
மன்னன் :	விக்கிரமசோழன்		

இடம் : திருவீழிநாதர் கோயில் உண்ணாழியின் வடபுறக் குமுதப்பட்டை

குறிப்புரை : இக்கல்வெட்டில் மன்னன் பெயர் குறிக்கப்படாமல் யாண்டு ஆறாவது எனத் தொடங்குகிறது. விக்கிரமசோழனின் 5-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டிற்கு அருகில் இருப்பதால் அம்மன்னனின் 6-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் பெயர் குறிக்கப்படாமலிருந்திருத்தல் வேண்டும். திருவீழிமிழலைப் பிடாரியார் கோயில் உத்சவம் யாதோ காரணத்தால் தடைபட்டுவிட்டதால் மீண்டும் பிடாரியார் கோயில் உத்சவமும், செவ்வாய்ப்பலியும் முன்னாளில் நிகழ்ந்தவாறு நிகழ்த்துவதற்கு நிவந்தம் அளிக்கப்பட்டதைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1 யாண்டு ஆறாவது நாள் முன்னூற்று இருபத்தெட்டிநால் உய்யக் கொண்டார் வள[நாட்டு] வெண்ணாட்டு ப்ரஹ்ம தேயம் திருவீழிமிழலை ச[பையே]ாம் திருவீழிமிழலை உடையார் கோயிலில் கூட்டமாகயிருந்து திருவீழிமிழலை உடையார் தேவதானம் ஜயங்கொண்ட சோழ நல்லூர்

2 க்கு பணித்து சபா [நி]யோகங் குடுத்த பரிசாவது இச் சயங்கொண்ட சோழ நல்லூர் . . . வுடையானேந் பிடாரியார் கோயில் பிரமிச் சமையில் இப்பிடாரியார் உத்சவமு செவ்வாய்ப் பெலியும் முந்பு திருவீழிமிழலையில் திருவீழிமிழலை உடையாரும் பிடாரியார்

3 முந்பு எழுந்தளும் படியே செவ்வாய்ப் பெலியும் திருவுத்ஸவமும் எழுந் தருளுவதாகவும் நாயநா[ர்] பணி செயு மக்களும் முந் . . . . . எப்பேற்ப்பட்டனவுங் கொண்டு வேண்டும் ப[ரி][சேய் செய்வுதாக ச[ம்ம]தித்து சபா நியோகங் குடுத்தோம் சபையோம் சபை அரிதன்* தாயந் சேந்தநாந

4 மாடிலன் கடம்பன் குமாரக்கிரமவித்த[னும்] ஆரிதன் மாதவன் உருத்திரமூத்தியாரும் வாச்சியந் அக . . . . . ஆரிதன் பசுவிதிகோ ந்[னும்] கமுத[வன்] பூதி கேசுவநாரும் ஆரிதநீலந்சுவரநாரும் பணியால் திருமிழலை [உடை] யாந் வேள்க்கோவந் அம்பலக் கூத்தந் வெண்காடநாந ஐநூற்றுவ ஐயங் கொ . . . .

---

* 'ஆரிதன்' — என்று இருத்தல் வேண்டும்

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 11 - ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	393 / 1908
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன்பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	7
மன்னன் :	முதலாம் ராஜாதிராஜச்சோழன்*		

இடம் : திருவீழிநாதர் கோயில் உண்ணாழி வடபுறச்சுவர்

குறிப்புரை : இக்கல்வெட்டின் தொடக்கம் இல்லை. பல்லவன் பட்டாலி நங்கையார் என்ற அணுக்கி, தன் பெயரில் ஏற்படுத்திய பட்டாலி ஈஸ்வரம் உடைய மஹாதேவர்க்கு நூற்றிருபத்தெட்டுக் கழஞ்சு நாலு மஞ்சாடி குன்றி பொன் தானமளித்து திருவீழிமிழலை உடையார் கோயில் ஸ்ரீ பண்டாரத்தில் வரவிலிட்டுக் கொள்ளப்பட்டது. இப்பொன் மூலமாக கிடைக்கும் நூற்று நாற்பத்து நாற் கலம் நெல்லைக் கொண்டு பட்டாலி ஈஸ்வரம் உடைய மஹாதேவர் நீராட்டு விழாத்தொடர்பாகப் பெருந்திருவமுது படைக்க வேண்டிய பொருட்களாகிய கைக்குத்தலரிசி, நெய், எண்ணை, மஞ்சள், கடுகு, கறியமுது, பயறு, தயிரமுது, பருப்பு, பாக்கு, வெற்றிலை ஆகியவற்றிற்கு ஆகும் செலவுகளுக்கும், புடவை ஒன்றுக்கும், நீராட்டுப் புடவை ஐந்திற்கும், திருவிளக்கு எண்ணைக்கும், நீராட்டு செய்தருள 108 கலசத்தின் கீழ் நெல் அட்டுவதற்கும் செலவு செய்யப் பெற்றதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 * ... ...

2 நெல் பதக்கு [சர]கும்பம் சூழ்ந்த புடவை ஒந்றுக்கு நெல் . .

---

* இக்கல்வெட்டின் தொடக்கப்பகுதி இல்லை. இக்கல்வெட்டு முதலாம் இராஜாதிராஜன் காலத்தைச் சேர்ந்தது என்பது பிற கல்வெட்டுக்களின் மூலம் ஊகிக்கமுடிவதால் அதன் படி மன்னன் பெயர் தரப்பட்டுள்ளது.

3 மும் [சோம]கும்பத்துக்கு திருவமுது அரிசி நாநாழிக்கு நெல் குறுணியும் . . .

4 . . . பிரசாதம் [. . டம் . க்கு] இ[ரு]நூறு வெற்றிலைப்பற்றும் இதுக்கு நெல் குறுணி இருநாழி ஆக நெல் [கலநே] தூணி நா

5 நாழியும் **ஸ்நாநம்** ஆடியருள கலசம் நூற்றெட்டிந் கீழ் அட்டும் நெல் தூணிப்பதக்கும் ஆகக் கைக்கு[த்த]லரிசி நா நாழிக்கு

6 நெல் குறுணி இ[ரு]நாழி . . . . . நைக்கு அரிசி நாநாழிக்கு நெல் குறுணி இருநாழி ஆடிஅருள நெய் நாநாழிக்கு நெல் கலநே

7 தூணி . . . .

8 தருப்பணம் நாநாழிக்கு நெல் நாநாழியும் இதந் நாழிக்கு நெல் முக்கலம் [எண்ணை] நாநாழிக்கு நெல் தூணியும் கடுகு நா

9 நாழிக்கு நெல் தூணிப் பதக்கும் முளிமஞ்சள் நாற்பத்தெட்டிநுக்கு நெல் தூணிப்பதக்கும் **சுத்த திரவ்யம்** ஐ[ம்ப]லத்துக்கு

10 நெல் தூணிபதக்கும் **ஸ்நாநப்** புடவை அஞ்சுக்கு நெல் ஐங்கலமும் நூல் ஒரு பலத்துக்கு நெல் முக்குறுணியும் பெருந்தி

11 ருவமுது செய்தருள அரிசி கலத்துக்கு நெல் இருகலனே தூணிபதக்கும் கறியமுதுக்கு நெல் தூணிப் பதக்கும் நெய்யமுது நா[ழி]

12 க்குநெல் தூணியும் பருப்பு நாநாழிக்கு பயறு குறுணிக்கு நெல் பதக்கும் பயறு நாநாழிக்கு நெல் குறுணியும் தயிரமுது குறுணிக்[கு]

13 நெல் முக்குறுணியும் சிறப்புத் திருவிளக்கெண்ணை நாழிக்கு நெல் தூணியும் அடைக்காயமுது இருபது இலையமுது நாற்பதிநால் [ப]

14 ற்று அரைக்கு நெல் நாழிக்கு **அபிஷேகம்** ஒந்றுக்கு நெல் பதிந் எண் கலமாக **தக்சிணை** விஷ ஒந்றும்

15 * . . . .

16 —ய படி . . . . . சூரிய கிராணம் ஒந்றுக்கு **ஸநாநப்படி** ஒந்றுக்கு ஆக **ஸ்நாநம்** எட்டுக்கு **ஸ்நாநம்** ஆடியருள **ஸ்நாநத் தீர்த்தத்துக்கு**

17 நெல் நூற்று நாற்பத்து நாற்கலம் பட்டாலி **ஈஸ்வரம்** உடைய **மகாதேவ**ற்கு அணுக்[கி]யார் பல்லவந் பட்டாலி நங்கை

18 யார் இட்ட பொந் நூற்றிருபத்து எண் கழஞ்சேய் நாலு மஞ்சாடியுங் குந்றி இது திருவீழிமிழலை உடையார் ஸ்ரீபண்டாரத்து ஒடு[க்]

19 கி இப்பொந்நுக்கு இத்தேவர் தேவதாநம் ஜயங்கொண்டசோழநல்லூர் நிலத்து இத்தேவற்கு அட்டக்கடவ நெல்லில் இப்பொந்

20 நூற்றிருபத்தெ[ண்] கழஞ்சேய் நாலுமஞ்சாடியுங் குந்றிக்கும் பொந் கழஞ்சுக்கு பலிசைநெல் கலநேய் தூணிப் பத

21 க்காக வந்த நெல் நூற்றுத் தொண்ணூற்றிரு கலநேய் தூணிப்பதக்கு ஒரு நாழி[யாக]வும் ஆட்டாண்டு தோறும் **ஆசந்த்ரவ**

22 ற் நெ[ல்]லும் அட்டக்கடவராகவும் (இத்) இத்தேவற்கு திருவமுது கறியமுது திருவிளக்கெண்ணைக்கு கல்வெட்டுப்படி .

23 நாட்டின நெல் . . தூணி உழக்கே நாற் செவிடாக நாள் முந்நூற்றுப் பதிநைஞ்சுக்கு உடைய நெல் முப்பத்ெ

24 தாரு . . . . உழக்கும் இப்பட்டா

25 லி **ஈஸ்வரம்** உடைய **மகாதேவர்க்கு** நிவந்தம் செய்தபடி நாள் ஒன்றுக்கு மூன்று சந்திக்கு [திரு]வமுது அரிசி குறுணி நாநாழிக்கு [ஐ]

26 ஞ்சிரண்டு வண்ணம் நெல் முக்குறுணி அறுநாழியும் மூன்று சந்தியும் கறியமுது ஆறுக்கு நெல் நாழி உரியும் முகப் . . . க்கு நெ

27 யமுது முச்செவிடே முக்காலுக்கு நெல் முந்நாழியும் மூந்று **சந்தி** தயிரமுது நாழி உரிக்கு நெல் நாநாழி உரியும் சிறுகாலை ச

28 **ந்தியும் சந்தி** விளக்கு இரண்டும் உச்சி வரையுமெரியும் **சந்தி** விளக்கு இரண்டும் இரவெரியும் **சந்தி** விளக்கு ஏழும் ஆக விளக்கு பதிந் ஒந்றுக்கு

29 [தி]ரு விளக்கெண்ணைக்கு எண்ணை ஒரு செவிடே காலாக எண்ணை உழக்கே . . . செவிடே முக்காலுக்கு நெல் குறுணி முந்நாழியும் . . . .

30 . . . . பத்துக்கும் திரு மஞ்சன காப்புக்கும் நெல்[நா]நாழியும் மூந்று சந்தி[அ]டைக் காயமுது பந்நிரண்டும்

31 . . . . நெல் நாழி உரி[யாழாக்கே நாழி செவிடு] . . . . யாழாக்கே நாலு

32 செவிடு ஆக . . . . நாள் முந்நூற்றறுபத்தைஞ்சுக்கு நெல் இருநூற்று எண் கலநே யறு

33 நாழி உரியும் . . . . . . நெல் நாற்கலமும் இத்தேவற்கு சாத்தும் பரிசட்டம் கொணர பந்நிருகலநே பதக்கு இ

34 ரு நாழி உரியாழாக்கு ஆகநெல் இருநூற்றிருபத்தொரு கலநே முக்குறுணி ஒரு நாழி உழக்கு:-

---

* இக்குறியிடப்பட்ட இடங்களில் கல்வெட்டு வரிகள் சிமெண்டால் பூசப்பட்டு மறைக்கப் பட்டுள்ளன.

———

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	8*
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1126
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	385 / 1908
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	8
மனன்ன் :	விக்கிரமசோழன்		

இடம் : திருவீழிநாதர் கோயில் உண்ணாழி வடபுறச்சுவர்

குறிப்புரை : கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது. திருநுந்தா விளக்குப் புறமாக நிலம் இறையிலி செய்து கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ முக்கோக்கிழானடிகளோடு வீற்றிருந்தருளிய கோப்பர கேசரி பந்மராாந [தி]ரிபுவந சக்கரவத்திகள் ஸ்ரீ விக்கிரம சோழ தேவ

2 ர்க்கு யாண்டு . . . . . . நாயற்று பூர்வபட்சத்து புதந்கிழமை

3 [யும்] பெற்ற பூரட்டா(த்)தி . . . . டியிருந்து கிராம காரியம் பேசிந வி

4 * . . . .

5 கொண் . . . . மிறையிலி செய்து கு . . . . . . ஸபா வி[வஸ்] தை ப[ண்*]ணிந

---

* ஆட்சியாண்டு இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையின்படி தரப்பட்டுள்ளது.

6 விடத்து உடையார் திருவீழிமிழலை உடையார் திருமடை விளகாத் திருக்

7 [கும் தேவர்] கந்[மி] . . . . . . ந முடைநாந மேற்பட்டவந் . . ச்சந் . . . அருமொழி . . . .

8 மாருடையாந் அம்பலக் கூத்தந் திரிச்சிற்றம்பல முடையான் பக்கல் நா[ற் பத்] திரண்டு காசு இரந்து கொண்டு . .

9 வரதேவர் ஸ்ரீ[தநம்] கொண்ட . . . . கொண்டு உடையார் திருவீழிமிழலை உடையார்க்கு ஒரு திருநுந்தா விளக்குப் புறமாக . . . . .

10 . . . மென்று கேட்டு நாங்களும் சம்மதித்து விற்றும் இறையிலி செய்து குடுத்த நிலமாவது . . . . . பிடாகை நாலாங் கட்டளை

11 . . . . . . க சதிரத்து நூறு குழி கொண்டது ஒரு மாவாக ரூவ இந் நிலங் காலுக்குக் கீழ்பார்க் கெல் . . . .

12 . . . . . . தெந்பாற் கெல்லை மேற்கு நோக்கிப் போந பெருவழிக்கு வ[ட]க்கும் வடபாற் கெல்லை

13 வாக்காலுக்கு தெற்கும் மேல்பாற் கெல்லை இக்கண்[ணா*]ற்று இரண்டாஞ் சதிரத்து கிழக்கும் இவ்விசைந்த பெருநாந் கெல்லை

14 க்கு நாங்கள் குடி விலை கொண்ட காசு இரண்டும் இறையிலி செய்து குடுத்து கொண்ட காசு பத்தும் ஆக காசு பந்நிரண்டு

15 . . . . . [கொ]ண்டு விற்று இறையிலி செய்து குடுத்தோம் ஆதி சண்[டேஸ்வரர்கு] இந்த மஹாச . . . . . .

16 * . . . .

17 யை எப்பேர்பட்டனவு எங்களூரிலே இ[ரு*]ந்து சந்திராதித்தவரை குடுக்கக்கடவே

18 . . . . . காசிலஞ்சு . . . பாரையும் ஏறிடுகரணதால் . . . .

19 ப்பித்தும் . . . எங்கள் . . . . காத்துக் கொள்ளவும் பெறுவார்க . . . . . .

20 [இப்பி]ரமாணபடி செம்பி[லுங்]* கல்லிலு[ம்] வெட்டி கொள்ளப் பெறு வாராகவும் இவரிடை இந்த மேற்ப[டி]

21 ப்பிச்சநும் இவர் வற்கத்தாருமே கைக் கொண்டு பயிர் செ[ய்]து இந் நிலத்துப்பெ . . . .

22 இத்திருநுந்தா விளக்கு ஒன்றும் செலுத்தக் கடவர்களாக . . . . . . ாக சம்மதித்[து]

23 [இறையி]லி செய்து குடுத்தோம் மஹா சபையோம் சபை உள்ளிட்ட . . . . . சபா

24 . . . . கன் பணியாலும் [கௌ]தவந்** வடுக . . . . பட்டர் பணி யாலும் . . .

25 ஆரிதந் சுவரந் . . .

---

* இக்குறியிடப்பட்ட இடங்களில் உள்ள கல்வெட்டு வரிகள் சிமெண்ட்டால் பூசப்பட்டு மறைக்கப்பட்டுள்ளன.

** கௌதமந் - என்று இருத்தல் வேண்டும்.

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	7
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1185
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	386 / 1908
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	9
மன்னன் :	மூன்றாம் குலோத்துங்கச்சோழன்		

இடம் : திருவீழிநாதர் கோயில் உண்ணாழி வடபுறச் சுவர்.

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்கச்சோழனின் ஏழாவதுஆட்சியாண்டில் மொய்க் குடையான் திருவையாறுடையான் பொன்னம்பலக்கூத்தநாந உலக வேளான் என்பவன் திருவீழிமிழலை உடையார் கோயிலுக்கு திருக்குத்துவிளக்கு ஒன்றும், அது எரிவதற்கு ஒவ்வொரு நாளும் எண்ணை உழக்கும் கொடுத்த செய்தி கூறப் பட்டுள்ளது. இறுதியில் சில பகுதிகள் சிதைந்துள்ளன.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஶ்ரீ திரிபுவனச்சக்கரவத்தி[கள் ஸ்ரீகுலோத்துங்கச்சோழ] தேவற்கு யாண்டு ஏழா

2 வது மகரநாயற்று பூர்வபட்சத்து சதுதசியும் வியாழக்கிழமையும்* பெற்ற புணர்பூசத்திநாள்

3 ரா[ஜ]ராஜ வளநாட்டு ஏமப்பேறகூற்றத்து மொய்க்குடி மொய்க் குடையான் திருவையாறுடை

4 யான் பொன்நம்பலக்கூத்த[நான உலக]வேளான் உய்யக் கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு

5 உடையார் திருவீழிமிழலை உடையாற்கு சந்திராதித்தவற் [சா] சுவதிகமாக இவரிட்ட திருக்கு

6 த்தி விளக்கு ஒன்றில் எரிய வைத்த திருநுன்தா விளக்கு ஒன்றிநுக்கு எண்ணை உழக்கும் இவரிட்ட

7 திருக் குத்தி விளக்கு . . . . எரிக்கும் திருவிளக்குக்கு இட்ட . . . . .

---

* எபிகிராபியா இண்டிகா தொகுதி xi கட்டுரை எண் : 11 [பக்கம் 125-ல் எண் 203] பேராசிரியர் ஜகோபி, இக்கல்வெட்டில் புதன் கிழமை என்பதற்குப்பதிலாக வியாழக் கிழமை என உள்ளது என்று கூறியுள்ளார். இக்கல்வெட்டின் காலம் கி. பி. 1185ம் வருடம் ஜனவரி மாதம் 16-ம் தேதி எனக் கூறியுள்ளார்.

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	31
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1049
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	10
மன்னன் :	முதலாம் இராஜாதிராஜச்சோழன்		

இடம் : திருவீழிநாதர் கோயில் உண்ணாழி மேற்புறச் சுவர்.

குறிப்புரை : திருவீழிமிழலை உடையார் கோயிலுக்கு முதலாம் இராஜாதிராஜனின் 31-ஆம் ஆட்சி ஆண்டு முதல் தேவதான இறையிலியாக நிலம் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. அவ்வாறு அளிக்கப்பெற்ற நிலத்தின் அளவுகளும், அந்நிலத்திலிருந்து வரும் நெல்லின் அளவும் கூறப்பட்டுள்ளன. வெள்ளான்வகையின், கீழ் இருந்த, இந்நிலத்தை தேவதான இறையிலியாக மாற்றியபின் இப்பகுதியின் பெயர் ஜயங்கொண்ட சோழ நல்லூரென்று பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இக்கல்வெட்டு மன்னனின் திருமுகம் (ஆணை) ஆதலின் திருவோலை, திருவோலைநாயகம் போன்ற அதிகாரிகளும், பிற அதிகாரிகளும் கையொப்பமிட்டுள்ளனர்.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்திஸ்ரீ** கோனேரின்மை கொண்டான்

2 [வெ]ண்ணாட்டு நாட்டார்க்கும் **ப்ரஹ்மதேயக்** கிழவற்கும் **தேவதான**

3 [பள்ளிச்சந்த கணிமுற்றூட்டு வெட்டப்பேறு]

4 [பழவறச்சாலா] போக முள்ளிட்ட ஊர்களிலார்க்கும் நகரங்களிலார்க்கும் யாண்டு . . . . . கங்கை கொண்ட சோழ]

5 புரத்து நம் வீட்டினுள்ளால் . . . .

6 **ப்ரஹ்மாத** ராஜநில் [உண்ணாவிருந்து உய்யக்] கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுத் திருவீழிமிழலை யளந்தபடி நில

7 த்தில் இவ்வூர் **மகாதேவர்** (தேவர்) காணி[யு]ட்பட உடலசதம் [பேசி யளந்து ஊர்க்கீழிறையிலியாக

8 [அ]நுபவித்து வருகிற நிலமு[ட்]பட நீர்நிலத்து நிலம் அய்ம்பத் தொந்றே ஒருமாவரையின் கீ

9 [ழ்] மூந்று மாகாணி அரைக்கா[ணி] முந்திரிகைக் கீழ் அரையும் கிழ கடி நிலத்தில் நிலம் அரை

10 ரக்காலே ஒருமா முக்காணிக்கீழ் அரையே இரண்டுமா முக்காணி முந்திரிகைக்கீழ் எழுமா

11 வரைக்காணி கீழ் ஆறுமாவும் . . . [கொடி]த் தோட்டமான நிலத்தில் நிலம் . . . .

12 ரைக்காணிக் கீழரையே அரைக்காணியிந் கீழ் அரையே . . . . கீழ் முக்[கா] லே நாலு . . . . .

13 லெ . . முந்திரிகைக்கீழ் . . . . மாவரைக்கீழ்

14 . . . க் கீழரை மாவிந் கீழ் ஒந்பதிந் மாவரைக்காணி முந்திரிகைக் கீழ் எட்டுமா முக்காணியும் . .

15 . . காணியும் இவ்வூர் இறைகட்டின நெல்லில் இந்நிலத்தால் . . . [என்னோ]பாதி வந்த வீரராக்கத . . . .

16 ளிட்டு [நீ]ங்கும் நிலம் திருமிழலை **மகாதேவர்** முன்பு ஊர்க்கீழ் இறை யிலியாக உடலே

17 ய் பேசியளந்து அநுபவித்து வருகிற நிலத்துக்கு என்னொபாதி வந்த நிலம் சுருங்கிநமையி

18 ல் இத்தேவர் முன்பு ஊர்க்கீழிறையிலியாக அனுப . . . . . இத்தேவர் ஸ்ரீ கோயிலுந் **திருமு**

19 [ற்ற]முந் திருநந்தவநமும் உள்ளிட்ட நத்தம் நிலமிரண்டே மூன்று மாக்காணி யரைக்காணிக் கீழரையே நாலு

20 [ம]ாக்காணி அரைக்காணிக் கீழரை மாவும் . . . . மாவின ரைக் காணி முந்திரிகை

21 * . . . .

22 மாவிந் கீழ் ஒருமாவரை முந்திரிகைக் கீழரையே இரண்டு மாவும் இவ்வூர் சபையார்க்கு ப்ரஹ்மதேயமாய் வருகின்ற

23 படி யாண்டு முப்பத்தொன்றாவது முதல் தவிர்ந்து இவ்வூரில் யாண்டு மு[ப்ப*]த் தொன்றாவது முதல் நீ

24 க்கி வேறு முதலாக்கி இன்நிலமான காணியுடையாரை மாற்றிக் [குடிநீக்கி]க் காராண்மை மீயாட்சியு

25 மிகுதிக் குறைமையும் உள்ளடக்கி அளந்தபடி நிலம் எழுபத்தொன் [றரையே] நாலு மாக்காணி அ

26 [ர]க்காணி முந்திரிகைக் கீழ் முக்காலே இருமாவரை அரைக்காணிக் கீழ் எட்டு மாவிந் கீழ் அரைக்காணி முந்திரிகைக் கீழ

27 ரையே அரைக்காணி முந்திரிகைக் கீழிருமாவரையிலும் ஸ்ரீகோயிலு ந் திருமுற்றமுந் திருநந்தவான

28 முங் குளமும் அரிசிலாநவாறு முள்ளிட்டு நீங்கும் நிலம் அஞ்சே அரை மாவி லரைக்காணிக் கீழரையே

29 அரைமா முந்திரிகைக் கீழரையே யிரண்டுமாவும் நீக்கி நீர் நிலம் அய்ம்பத்தொன்றேயரை

30 * . . . .

31 முக்காணிக் கீழரையே யிரண்டுமா முக்காணி முந்திரிகை [க்கீழ்] எழு மா வரைக்காணிக் கீ

32 ழ் [மூன்]று மாவுங் கொடித் தோட்டம் நிலம் [நாலே]யொன்பது மாவும் காணியரைக்காணிக் கீழரையே

33 அரைக் காணிக் கீழரையே நாலுமாமுக்காணி யரைக்காணிக் கீழ் முக்காலே காணி முந்திரிகைக் கீழிரு

34 [மா]வரையும் புந்செய் நிலம் நாலேயரைமாவரைக் காணிக்கீழ் . . மாவிந்கீழ் ஒருபதிந்மாவரை

35 [க்கா]ணி முந்திரிகைக் கீழ் எட்டுமா முக்காணியரைக்காணியும் ஆக நிலம் நீக்கி நின்ற அறுபத்தொன்ற

36 [ரை]யே முக்காணி முந்திரிகைக் கீழ் எழுமாவிந் கீழ் முக்காலே யொரு மாவரைக்காணி முந்திரிகைக் கீழரைே

37 ய யரைக்காணி முந்திரிகைக் கீழிருமா வரையினால் முந் இறை கட்டிநபடி யாண்டு முப்பத் தொந்றாவது

38 முதல் தவிர்ந்து இன்நிலத்தால் வெள்ளாந்வகை வரிசை[க்கீழ்] வந்த நெல்லு ஆறாயிரத்து மு

39 ந்[நூற்]று முப்பத்தறு கலநே முக்குறுணி உழ(க்குழ)க்கும் யாண்டு முப்பத்தொன்றாவது முதல் இறை

40 . . . . கணக்கு [யாண்டு] முப்பத்தொன்[றா]

41 [வது] முதல் ஆட்டாண்டு தோறும் நி[ன்]றிறையா யிறுப்ப . . . .

42 பியர் தவிர்ந்து ஜயங்கொண்டசோழநல்லூர்ரென்நும் பியரால் தேவதாநம் இறையிலியாகவும்

43 [இறை]யிலிட . . . குடுக்கவெந்று நாஞ் சொல்ல நம்மோலை எழுது வி[த்*]தார் வி[டங்]க விழுப்ப

44 [ரையந்] [எ*]ழுத்தினாலும் நம்மோலை நாயகம் உய்யக் கொண்டார் வளநாட்டு வெண்[ணா]ட்டுக் கேரளாந்

45 [தக ச]ருப்பேதிமங்கலத்து நாராக்கண் மாராயன் சிங்கன்(ாந) வடுகநாந ராஜாதிராஜ ப்ரஹ்மமாராய

46 [னும்] அருமொழி விக்கிரம சோழனாந ராஜாதிராஜ மாவலி வாண ராயநும் அரங்கன் ஜயங்கொ

47 [ண்ட] சோழநாந இராஜாதிராஜ குறுக்கை வேளானும் அரயன் . . கருளுவாந் . . னாந ப்ரஹ்மாதிராஜக் க

48 [லிங்க]த் தரையனும் ஒப்பிநாலும் புக்க நந்திட்டிந் படி[யே] வரியிலிட்டுக் கொ[ள்ள]வும் என்று நம்

49 [கரு]ம மாராயும் நீலன் குடிதாங்(குடிதாங்)கியான ஜயங்கொண்ட சோழ வீரவிளம்பனும் வீர

50 னாநத் தில்லை விடங்கநான ஜயங்கொண்டசோழ [பொத்]தப்பிச் சோழனுஞ் சொல்ல இப்

51 . . . . வளநாட்டு

52 . . . யூர நாட்டு நெல்குன்றங்கிழாந் காவந் சந்திரசேகரநான . . . .

53 [ஜெ]யங்கொண்ட சோழ மண்டலத்துக் காலியூர்க் கோட்டத்துக் காளியூர் நாட்டு உக்கலுடையான்

54 குமரகாளந் வாசுதேவனாந வளவ[ந்] மூவேந்த வேளாநும் உய்யக் கொண்டார் வளநாட்டு அம்ப

55 [ர்] நாட்டுப் பழையாறு கிழாந் அம்பத்தூர் சூற்றியும் இராஜராஜப் பாண்டி நாட்டு மிழலைக் கூற்

56 [ற]த்துக் கீழ் கூற்றுவனேன் பற்று உடையாந் கோன் அம்பலக் கூத்தனும் அருமொ[ழி]தேவ வள

57 [நா]ட்டு ஆர்வலக் கூற்றத்து மும்முடி சோழநல்லூர் கிழவந் சிங்கானை இராமனாந மும்முடிச் சோழ மூவேந்த

58 வேளானும் ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்து மாங்காடு நாட்டுக் கோ

59 ன் மூரன் அரங்கன் நாராயணநான அபிமாநமேரு மூவேந்த வேளானும் நித்த விநோத வளநாட்

60 டு வெண்ணிக் கூற்றத்துக் குவளை வேலி உடையான் கோயில் சித்தனாந ராஜாதிராஜப் பல்ல

61 வரையநும் ராஜாஸ்ரய வளநாட்டு செம்புறைக் கண்டத்துக் கொடு குடையாந் பிச்சந்[ஆ]தித்தனாந

62 * . . . .

63 [இநாட்டு] உத்தமசோழ நல்லூர் கிழவன் கோன் அழகிய பாண்டிய நாந [உத்தம சோழ]

64 செம்பி நாட்டுக் கோநும் ராஜேந்திர சிங்க வளநாட்டுக் குறுக்கை நாட்டு ஜயங் கொண்ட சோழ

65 நல்லூர் கிழவன் பாலை கூத்தனான [வீ]ரராக்கித மூவேந்தவேளாநும் உய்யக் கொண்டார் வ[ள]

66 நாட்டு விளை நாட்டு மாத்தூருடையா[ந்*] நம்பி. படையடக்கியாந வீர[நா]ராயண முவேந்தவேளா

67 நும் ராஜராஜப்பாண்டிநாட்டு ராஜேந்த்ர சோழ வளநாட்டுத் துகவூர் கூற்றத்து விளங்குடி கிழா

68 [ன்] ஆணியா[ப]யந் அரங்கநான [மு]த்தாபரண மூவேந்த வேளாநும் உய்யக் கொண்டார் வளநாட்டுத் தி

69 ருவழுந்தூர் நாட்டு அழகிய சோழ நல்லூருடையாந் அரலூட்டி புரவிணியாற[னா]ன ராஜாஸ்ரய மூ[வேந்த] வேளாநு [ம்]

70 [இ]ந்நாட்டு மகதை கீழாறன் திசை ஆதித்தநான அரிந்தமன் விழுப் பரையனும் ராஜேந்த்ர சோழ வள

71 நாட்டு திருமுநைப்பாடி நாட்டு பாக்கநாட்டுக் கயற்பாக்கிழாநும் தேவந் [பே]ரடி

72 . . . . திருவமுது . . . . . ருடையாந் காடந் . . . .

73 ஜேந்த்ர சோழச் . . . . த்துச்சிமா . . . .

74 . . . . ளூர் நாட்டு சிங்களாந்தக நல்லூர் . . . . . யாந் பாக்க . . . . . .

75 [சோ]சாழ மூ[வேந்தவே]ளாநு[ம்*] [பு]லியூர்க் கோட்டத்து நிரோ . . . .

76 . . . . ந்த ராஜ மூவேந்த வேளாநும் அரு[மொ]ழி தேவ வளநாட்டு . . . ம் ஆர்வலக் கூ . . . . .

77 ாத்து நிட்டைச் . . சி உடை . . உடையானாடவலாநாந வில்லிவரு சோழ . . . . . . யனும் இந்த

78 டம் வண்டாழை . . . கூற்றத் . . . . குடையாந் சடையந் புத்தநாந மீனவன் . . . . வள . . . .

79 ம் இந்நாட்டுப்பூ . . . ப்ப . . . யூர் கிழவநாட்டான் சேந்தனாந . . . . சோழ மூவேந்த வேளாநும் நம்

80 . . . . விருக்கும் நித்த விநோத வள[நாட்டு]த் தநியூர் ராஜாதிராஜச் சருப்பேதி மங்கலத்து உ[டை]யார் சோலைப்

81 பட்ட **சோம**யாஜியும் . . . . ங்க வளநாட்டு இந்நம்பர் நாட்டுக் கொற்ற மங்கலத்து பற்பநாபப்பட்டன்

82 **[சோம]**யாஜியும் . . . .

83 ற்றத்து நெய்தல் வாயிலுடையாந் சாத்தன் தில்லை வாணனும் அரு மொழிதேவ வளநாட்டு . . . .

84 வேளூர்க் கூற்றத்து சுரக்குடையாநப் பட்டாலக நம்பலக் கூத்தனும் உய்யக் கொண்டார் வளநா

85 ட்டு அம்பர் நாட்டு தண்டலையுடையாந் அரங்கன் வேளானும் ராஜ ராஜ[பா]ண்டி நாட்டு இராஜேந்தர சோழ

86 வளநாட்டு மிழலைக் கூற்றத்து ஸ்ரீ பிராந்தக நல்லூருடையாந் பிடார நக்கனும் நித்த விநோத வளநாட்டு வெண்ணிக்

87 கூற்றத்து தேவந் ம[ங்]கல முடையார் கூத்தந் இராஜராஜனும் புரவு வரி திணைக்களம் இந்நாட்டு வெண்ணிப் புத்தூ

88 ர்ருடையாந் பெரும் . . ந்தாரியும் உய்யக் கொண்டார் வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டுச் செங்குடி கிழாந் . . .

89 தித்தனும் நித்த வினோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்து மருத்தூ ருடையாந் [நாகேஸ்வரனும்] உய்யக் கொண்

90 [ட]ார் வளநாட்டு விளை[நாட்டு] . . . . [ெ]காண்டாந் பதி . . . . சாத்தனும் இராஜராஜ வளநாட்டுப் பேரையிற் கூற்றத்து

91 . . . . - . . . . . . நாட்டு [உ]த்தம

92 சோழ நல்லூருடையாந் சுர [வி] நாராயணநும் ஜயங்கொண்ட சோழ [மாராயன்] . . . .

93 யாடி உடையார் சடையன் கணவதியாந பாநல பஞ்சவந் வேளானும் உய்யக் கொண்டார் வளநாட்டு அருமொழி தேவ

94 நாட்டு இளையான் . . . . மருத மாணிக்கமும் மாளிகை . . . . . புரவுவரி திணைக்களம் நித்த விநோத

95 வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து ஆவூர் உடையாந் ஆரூர்க் கண்ணநும் இக்கணக்குப் புரவுவரி நாயகம் [சத்]திரிய சிகாமணி வ

96 ளநாட்டுப் பனையூர்நாட்டு நெல்வேலியுடையான் . . . நக்கநாந குலசேகர மூவேந்த வேளானும் வரிபொத்த[க]

97 ம் இராஜராஜ வளநாட்டுக் கீழ் வே[ங்கை] நாட்டுப் பெருநல்லூருடை யாந் மாறன் காளியும் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு

98 திருநறையூர் நாட்டு ராஜமல்லச் சருப்பேதி மங்கலமுடையான் பார்வதீஸ்வரனும் உய்யக் கொண்டார் வளநாட்டுக் குறும்பூ[ர்]

99 நாட்டு பராக்கிரம சோழச் சருப்பேதி மங்கலத்து நாநூற்றுவந் கணத் தாநும் ராஜராஜ வளநாட்டு . . . . . .

100 * . . . .

101 கநும் மடிகை . . . . . . குத்தமங்கல முடையாந் . . . .

102 . . . வளநாட்டு . . . சாக் கூற்றத்து நிலப்பாடி உடையாந் மூரியா னார்கு அருமொழிதேவ வளநா[ட்டு இங்]கணாட்டு

103 நெற்குப்பை உடை[யா]ந் அ[ரும]ந்திறல் ஆநைக் காவனும் நித்த விநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்துப் டா

104 . . . . முடையாந் புகழ் . . . த்தமநும் க்ஷத்திரி சிகாமணி நாட்டுத் திருநறையூர் நாட்டுக் காட்டூர் உடையான் ஊரா . . . . .

105 . . . டையொளியும் அருமொழிதேவ வளநாட்டு வண்டாழை வேளூர்க் கூற்றத்து பெரியன் குடையான் தேவன் பிட

106 . . . . க்ஷத்திரி சிகாமணி வளநாட்டுப் பறையூர் நாட்டுக் கூத்தநூர் கிழவந் சூற்றி இராமநும் மளிகை முதலுக்கு முகவெ

107 [ட்டி] க்ஷத்திரி சிகாமணி வளநாட்டு திருநறையூர் நாட்டு விசலூர் கிழவந் பொற்காரை கூத்தாடியும் வ[ரி]யிலிடு இநாட்டு. . .

108 . . . த்துச் சேரியுண் . . . . . கேளிரன் சாபநும் இந்நாட்டுப் பறையூர் நாட்டு இறையாந் சேரி கிழவந் ஐய்யாறந் வீதிவிட

109 [ங்கநும்] இந்நாட்டு . . . . . கூற்றத்து மருதத்தூருடையாந் பூரன அருமொழியும் அருமொழி[தேவ] வளநாட்டு வண்டாழை வே

110 வளூர்க்கூற்றத்துப் . . . . அரநெறியும் ராஜராஜ வளநாட்டுப் . . . . நெல்வாயிலுடை

111 * . . . .

112 தேவத்தளிக் குளபநும் ஆதவேகல முடையாந் இரா[சகன்] ஜநநாத னும் [காரி]நல்லூர் கிழவந் கூத்தன் திருவிண்ணந்

113 . . . . வரிப் பொத்தகக் கணக்கு க்ஷத்திரி சிகாமணி வளநாட்டு [அ]ளநாட்டு அத்தி[ப்பி]யூர் உடையாந் மாதவந் வெண்காடனும்

114 உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டுக் கீரகாருடையாந் மருதநாயக கோமு[க]நும் ராஜாஸ்ரய வளநாட்டுக் கீழார்க் கூற்ற . . . . .

115 . . . . உடையார் . . . . . . காட்டூருடையாந் பாதகுஞ்சிரமல்லனும் ராஜாஸ்ரய வளநாட்டுக் கீழார் கூற்றத்து மருதூருடை

116 யான் வேளாந் . . . பாண்டி குலாசநி வளநாட்டு இடையாற்று நாட்டு மணற் குடையாந் . . த்தி அடிகளும் க்ஷத்திரி சிகாமணி வள

117 னாட்டுத் திருவாரூர் கூற்றத்து . . . . இன்நாட்டுப் ப[னை]

118 யூர் நாட்டு விசலூர் கிழவன் அட்டாந் அழகியானும் அருமொழி வளநாட்டு இடையளநாட்டு வல்லமுடையாந் விடங்கன் [ஐய்ய]

119 றறனும் நித்தவிநோத வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்துக் கங்கை கொண்டாந் [விச]லூர் கிழவன் சாத்தந் ஆடவலானும் உய்ய

120 ... ... வளநாட்டுப்பனை

121 யூர் நாட்டு .... ஆற்காட்டுக் கூற்றுத்து கருப்பூர் உடை

122 யான் அரயநாதித்தநும் மங்கலங்கிழான் அநந்தந் சிங்கனும் நெல்க் குப்பை உடையாந் மூர்த்தி சிகுரு குருமஹாசித்தி

123 வரிப்பொத்தகம் உய்யக்கொண்டார் வ[ள நாட்டு]க் குறும்பூர் நாட்டு பராக்கிரம சோழச் சருப்பேதிமங்கலமுடையான் [நாநூ]

124 ற்றுவந் கணக்கநும் வரியிலிட்ட .... க்ஷத்திரி சிகாமணி வள நாட்டுத் திருநறையூர் நாட்டுப் புதுச்சேரியுடையாந்

125 நீறந்[சற்]பனும் பட்[டே]ாலை எழுத்து கீழ்பட்டோலை அருமொழி தேவ வளநாட்டு வண்டாழை வேளூர்க் கூற்றத்து கட்டிமர் உ

126 டையாந் தாமோதிர[ந்] அரங்க[ந் இந்திரனும்] வரியிலிடுவித்தப் பரவு வரி திணைக்களம் நித்த விநோத வளநாட்டு வெண்ணிக்

127 கூற்றத்து மருதத்தூ[ரு]டையாந் அய்யாற[னும்] இந்நாட்டு [வெ]ண்ணிப் புத்தூ[ரு]டையாந் பெருமான் சூற்றியுமிருந்து யாண்

128 டு முப்பத்தொந்றாவது நாள் [நாற்பத்தாறினால்] வரியிலிட்டுக் குடுத்த தங்கணாட்டு திருமிழலை நிந்றும் பிறிந்த ஜயங்கொண்ட சோ

129 ழ நல்லூர் .... கண்காணி ....

130 க்ஷத்திரி சிகாமணி வளநாட்டு .... அபிமாந தொங்க ....

131 வளநாட்டு .... கூற்றத்து மருதத்தூருடையாந் அய்யாறந் நாகீ ஸ்வரந் ..... பட்டந் க்ஷத்திரி சிகாமணி வளநாட்டு இராஜேந்தி[ர]

132 சோழச் சருப்பேதி மங்கலத்து .... பவளப் புறத்து ஸ்ரீகிருஷ்ண பட்டநை .... குடுத்தோம் தாங்களும் ..... ஸ்ரீமுகம் வரக் கண்டு

133 உடனின்று எல்லை ...... பிடி சூழ்ந்து பிடாகை நடந்து கல்லுங் கள்ளியும் நாட்டி அறவோலை செய்து போத்தக [வெந்று]

134 திருவாய் மொழிந்தோம் தி[ரு]வோலை வீதி விடங்க விழுப்பரையந் எழுத்து திருவோலை நாயகம் மாராயந் சி

135 கேரளாந்தகநாந ராஜாதிராஜ **பிரம்மாதி** ராயனும் அருமொழி விக்ரம சோழநாந ராஜாதிராஜ [விக்கிரம] மாராயனும் அரயந் ஜயங் கொண்ட

136 சோழநாந ராஜாதிராஜன் இருக்குவேளானும் அரயந் கேரளாந்தக நாந* ராஜாதிராஜக் க[ற்]ப்பகத்தரையனும் ப்பினாலும் **ஸ்வஸ்திஸ்ரீ** உ

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	3
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1054
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	235 / 1938 - 39
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன்பதிப்பு :	—
அரசு :	சோழர்		
மன்னன் :	இரண்டாம் இராஜேந்திரச் சோழன்	ஊர்க் கல்வெட்டு எண்	11

இடம் : திருவீழிநாதர் கோயில் கருவறை மேற்குப் புறப் பட்டிகை

8 உடையரான[3] நத்தத்தில் தெற்கடைய இவர் பக்கல் தன்ம தானத் தால் பெற்ற குழி யசூம் வடக்கில் திருமட விளாகத்து மனைவாய் நீளத்துக்கு [வடக்கு] **ப்ரம்ம**தேயம் திருவீழிமிழலை இறையிலி நத்த மாய் ஊற்கணக்கு மெய்மொழி நான் மறையோர் வேளான் பக்கல் புத்த மங்கல முடையாந் குன்றமெறிந்தார் வீரபத்திரப் பிள்ளை பேரால் மணங்

9 கேணி ெ . . . தந்குலைக்கு தெற்கும் திருநாமத்துக் காணிக்கு மேற் கும் பட்ட விலை கொண்டு தந்த குழியில் குழி ரூயரும் ஆக சித்தி முல்லியம் உட்பட இறையிலி நத்தம் குழிாயச ஐ இக்குழி நூற் றொருபத்து நாலே முக்காலும் பரிவற்தனையால் திருநாமத்துக் காணி யாகக் குடுத்து சித்த முல்லியத்துக்கு ஒக்க இக்கோயில் கணக்கு நி

10 றைஞ்சவந்தணர் வேளானும் தேவர்கன்மி நற்துணை ஞான சம்பந்த பட்டனும் ஸ்ரீமா**கேஸ்**வரக்கங்காணி கோட்புலியாண்டாரும் ஸ்ரீகாரியம் செம்பியன் பல்லவராயரும் எழுத்திட்டுப் புகுந்த சாதனப்படி மிகுதிக் குறைவு உட்பட குழி ாஉவ ஆக இம்மடம் குழி ாருயசூவ இக்குழி! நூற் றைம்பத்தாறே காலும் அழகிய தி[ரு]*ச்சிற்றம்பல

11 முடையான் திருமடமென்னும் திருநாமத்தால் மடமும் வாய் நீளமுமாகச் செய்தது :- இப்படிக்கு இவை கோயிற் கணக்கு நிறைஞ்ச வந்தண வேளானெழுத்து இப்படிக்கு இவை தேவர் கன்மி நற்துணை ஞான சம்பந்தபட்டனெழுத்து இப்படிக்கு இவை ஸ்ரீ மா**கேஸ்**வரக் கங்காணி கோழ் புலி[4] ஆண்டார் எழுத்து :-

---

3 உடையாரின் - என்றிருத்தல் வேண்டும்.

4 கோட்புலி - என்றிருத்தல் வேண்டும்.

12 இப்படிக்கு இவை ஸ்ரீகாரியம் செம்பியன் பல்லவரய னெழுத்து இப்படி அறிவேன் பூண்டி யுடையாந் மிழலைப் பெருமாளேன் இப்படிக்கு இவை நாட்டியத்தாங் குடையாந் திருஞானசம்பந்தனெழுத்து இப்படி அறிவேன் வாஹந திருச்சிற்றம்பல முடையாந் ஆட் கொண்டனாயக பட்டனேன் :- இப்படிக்கு இவை குளத்துடையார் செல்லப் பிள்ளை

13 யாண்டானெழுத்து இப்படி அறிவேன் தனியூர் பெரும்பற்றப்புலியூர் அம்பாவுடையான் முதலிப் பிள்ளையேன்:- இப்படி அறிவேன் அவசிய மங்கல முடையான் நமச்சிவாய தேவனேன்:- இப்படிக்கு இவை நற் துணை ஞானசம்பந்தர் எழுத்து. இப்படி அறிவேன் கௌதமந் வற்றி சந்தான உய்யக் கொண்டாந் பட்டனேன்:-

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	9-ஆவது
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13-ஆம் நூற்றுண்டு*
ஊர் :	திருவீழிமிழலை		
மொழி :	தமிழ்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	414/1908
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பாண்டியன்	ஊர்க் கல்வெட்டு எண்	79
மன்னன் :	சடையவர்மன் சுந்தரபாண்டியன்		

இடம் . திருவீழிநாதர் கோயில் மூன்றாம் பிரகாரத்தின் மேற்குச்சுவர்

குறிப்புரை. சடையவர்மன் சுந்தரபாண்டியனின் ஒன்பதாம் ஆட்சியாண்டினைச் சேர்ந்த இக்கல்வெட்டு, இக்கோயிலில் முன்பு திருமுறையார் திருமேனிகள் [அறுபத்து மூவரில் முதல் நால்வர்?] திருக்கைக் கொட்டியில் திருப்பாட்டு பாடப்பட்டு வந்தது. ஆனால் அது எக்காரணத்தாலோ தடைபட மீண்டும் திருமுறையார் திருமேனிகள் திருப்பாட்டு கேட்கவும், பூசைக்கும். திருக்கைக்கொட்டிப்புறமாக நிலம் கொடுத்த செய்தியும், அபிஷேகம் செய்யப் பொன் கொடுத்த செய்தியும் கூறப்பட்டுள்ளது. திருமுறையாரை திருக்காப்பு நீக்கி, திருவேடுகளும் [ஓலைச் சுவடிகள்?] தனித்து பார்த்து நோக்கி அவர்களை எழுந்தருளச் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. கோயில் கணக்கர்கள் கையெழுத் திட்டுள்ளனர்.

கல்வெட்டு *:*

1 **ஸ்வஸ்தி** ஸ்ரீ கோச்சடை பன்மர் தி[ரு]புவனச்சக் கரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தே[வ]ற்கு யா ண்டு ௯ வது துலா ஞாயற்று **அபரபக்ஷத்து சப்தமி**யும் நாயற்றுக் கிழ

* எபிகிராபியா இண்டிகா தொகுதி XI பக்கம் 135-ல் திரு. ஜகோபி அவர்கள் இக்கல்வெட் டின் கோள்நிலைக் குறிப்புக்கள் முதலாம் அல்லது இரண்டாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியனின் ஒன்பதாம் ஆட்சியாண்டிற்கு ஒத்துவரவில்லை என்கிறார். மேலும் இக்குறிப்புக்களைக் கொண்டு கி.பி. 1259, 60, 61 மற்றும் 1283, 84, 85 ஆகிய ஆண்டு களுக்குக் கணித்துள்ளார்.

2 மையும் பெற்ற பூசத்துநாள் உய்யக் கொண்டா[ர்] வளநாட்டு [வெண்] ணாட்டு உடையார் திருவீழிமிழலையுடையார் கோயில் ஆதிசண்டேசுர தேவர் திருவருளால்

3 தேவர் கன்மி கோயில் கணக்கரோம் இன்னயநார் திருக்கை[க் கொட்டி] வரி[ப்புற]மாய் கொ[ண்]டு நாள் படத் திரு[முற]றயார் எழுந்தருளி இருந்து திருப்பாட்டுக் கேட்டருளப் பெறாம

4 ல் போதுகையில் பின்பு தேவர் நாரசிங்கதேவ . . . . ன் . . கடவ காழித் திருமேனி முன்பிலாண்டு உடையார் திருக்கை கொட்டியில் திருப்பாட்டுக் கேட்டருளும் ப

5 டியே திருப்பாட்டுக் கேட்டருள வேணுமென்று மு . . . . த் திருக்கை கொட்டியும் சமைத்து சிங்காதனமும் சமைத்து ஒருபடி திருமுறை யாரும் எழுந்தருளப் பண்ணி ஏறியருளவும்

6 பண்ணி திருப்பாட்டுக் கேட்டருளிப் பூசை கொண்டு இப்புது கை [கொட்டி] திருமுறையார் அமுது செய்தருள வேணுமென்று [இயந்ததை] க்கு அமுது படிக்கும் திருப்பரிகாரமாய் நிந்று திருமுறையான் நோக்குதிற் தி

7 ருமேனிக்கு அமுதுக்குமுடலாகத் திருக்கை கொட்டிப் புறமாக [ரூ] . . கூப நிலம் கொண்டு இவரை க[ர*]ப்பாத்துத் தேவதானம் ஜயங் கொண்ட சோழ நல்லூரில் காணியாளர் விற்கிற விலைப்படி வேலி நிலத்

8 துக்கு எண்ணாயிரத்து முன்னூறு காசுக்கு வருகிற விலைப்படி [ஐம்ப]த் தைஞ்சு பண[ம் கொ]* ண்டு வருகையில் இக்காசு எண்ணாயிரத்து முன்னூறும் னால் பணம் ஐம்பத்தைஞ்[சு] நாங்கள் கைக் கொ[ண்]

9 டு விழீவன நாயக தேவற்கு திரு அபிசே[கம் ப]ண்ணிச் சாத்து கைக்குப் பொன் கொள்கை கு[ட]லாகப் பண்டாரப்பட்டோலையில் முதல் இட்டு பண்டாரத்தே முதலாகையில் இதுக்கு நாயனார்கு புது முத

10 லாக பலரும் புகுதவிட்ட நிலத்தில் திருக்கை [கொட்டிப்புற]மாக குடுத்தது விலை எழுதிக் குடுக்கக் கடவோமான நிலம் [இவர்]குச் செத்த தேவதாநத்து மூன்றாங் கண்ணாற்று இரண்டாஞ் சதிரத்து பழநற்

---

* 8300 காசுக்கு ஈடாக 55 பணம் என்று வழங்கப்பட்டிருக்கிறது.

11 கடையான் நிலமாய்ப் புகுத விட்ட . . . . . மென்று பேர் கூவப்பட்ட நிலம் நாலு மாவும் ஐஞ்சாங் கண்ணாற்று மூன்றாஞ் சதிரத்து முள்ளி நல்லூருடையான் புகுத விட்ட இவன் பேர் கூவப்பட்ட நிலம்

12 இரண்டு மா ஏழாங் கண்ணாற்று இரண்டாஞ் சதிரத்து பூதமங்கல முடையான் மிழலை நிலம் இரண்டு மாவும் எட்டாங் கண்ணாற்று இரண்டாஞ் சதிரத்து மேற்படியான் நிலம் ஒருமா அரையே அரைக் காணிச் சின்னம்

13 **ப்ரம்மதேசம்** திருவீழிமிழலை மேற்கட்டளை உட்கடை திருவெ[ண்]காடு வதிக்கு மேற்கு *இராரா வாய்க்[காலு*]க்கு தெற்கு முத[ற்கண்] ணாற்று இரண்டாஞ் சதிரத்து திருவெண்காடு பட்ட சோமாசியார் அனாதரத்து பிராமணர் புகுத

14 விட்ட ஆலஞ் செய்யென்று பேர் கூவப்பட்ட நிலம் ஆறுமாக்காணி ஆக நிலம் முக்காலே மாவும் பின்பு . . . ன மூன்றாவது நாளில் நாயனார்கு புகுந்த நிலமாய் இவ்வாட்டை அற்பசி மாதத்து சேத்துக்கு

15 டுத்த இத்தேவதானத்து எட்டாங்கண்ணாற்று ஐஞ்சாஞ் சதிரத்து நற்றுணை ஞான சம்ப[ந்த]ன் கூற்றுக்குலையான பத்தர்கள் விஸ்வாவதிக்கு கிழக்கு பரவையாற்றுக்கு வடக்கு படுகைக் கண்டத்து விளங்

16 குடையான் திருச்சிற்றம்பல முடையான் முன்னாள் தன்ம நல்லூருடை யான் கங்கன் பால் விலை கொண்டு இவன் அபாவத்து நாயனாக்கு புகுதவிட்ட நிலம் மும்மாவரையும் இதன் கிழக்கு மேற்

17 படியான் தந்த நிலம் அரைமாவும் ஆக நிலம் வேலி இன்னிலம் வேலி யும் முன்னாள் திருமுறையார் அமுது செய்தருளப் பூண்டியுடையார் மிழலைப் பெருமாள் தந்த ஏழாங்க

18 ண்ணாற்று மூன்றாஞ் சதிரத்து நிலம் இருமாவரையும் ஆக நிலம் ஒன்றேயி[ருமாவரையும்] திருக்கை கொட்டிப் புறமாக பத்[தர்] கையில் திருமுறையார் அமுது செய்தருள நாள் [ஒ]ன்றுக்கு முன்னாழி அரிசியுங் கறியமுது விஞ்ச

19 னமும் பலகையிலே விட்டு திருமுறையார் அமுது செய்தருளவும் அமுது செய்தருள செய்து தம் திருக்கை கொட்டிக்குத் [திருமுறையார்] செய்கிற திருமேனி திருமுறையாற்கு திருப்பள்ளித் தாமம் கழித்துச் சாத்தி . . . . . . படி திருமு

20 றையாரைத் திருக்காப்பு நீக்கி திருவேடுகளும் தனித்துப் பாத்து நொக்கி எழுந்தருள வேண்டும் பொழுது எழுந்தருளவும் பண்ணி . . . . காக்கவும் திருப்பரிசட்டம் திருமுன் விரிதிரு முட்டுக்களுள்ளவையும் . . . .

21 செய்கிற திருமேனிக்குடலாக இப்பிரசாதம் பெறக் கடவார்க[ளாக*]வும் இப்படி சந்திராதித்தவரையும் விடக்கடவோம் இப்படி தாழ்வு பட்டனா ளுண்டாகிலும் திருமுறையார் அமுது செய்தருளுகிற படியில் கு

22 றையாமல் விடக்கடவோமாகவும் திருமுறையார் அமுது செய்தருளும் திருப்பரிகாரம் செய்கிற திருமேனியேறவும் கோயில் நிமந்தம் திருக்கை கொ[ட்]டி

23 யில் ஓதும் திருமேனி பெறவும் இப்படி சம்மதித்துக் கல்வெட்டிக் குடுத்தோம் ஆதிசண்டேஸ்வர தேவர் திருவருளால் தேவகன்மி கே[ாயில் க]ணக்க ரோம் இக்காசு எண்ணாயிரத்து முன்னூ

24 றினால் விலைப்படி பணம் ஐம்பத்தை[ஞ்சும்] பின்பு பொற் குறைக்கு இத்திருமேனி இட்ட பண[ம் மூன்]றும் ஆ[க பண]ம் ஐம்பத்தெட்டுக்கும் புங்கூருடையார் . . . . . . உடையார்

25 பக்கல் கொண்ட ஒன்பது மாறி பொன்[ரு கழஞ்]சு இப்பொன் ஐங்கழஞ் சும் இட்டு வீழி[வனநாயக]த் தேவர்கு திரு அ[பி]சேக [ஞ் செய்]கக்கு பொன் போத . . . . பண்

26 ணி உடையாற்கு ஒன்பதாவது சித்திரை மாதம் பதின் மூன்றாந்தியதி நா . . . . பில் முதலிட்டு உடையார் . . . . . . இப்படி திரவியம் பண்டாரத்தில் புகுந்தமைக்குத் தே

27 வர் கன்மி கோயில் கணக்கரோம்

28 இப்படிக்கு இவை கோயில் கணக்கு பரித்திக்குடையான் மகன் நாறுக் . . . . . எழுத்து இப்படிக்கு இவை கோயில் கணக்கு திரு வீழி மிழலையு]டையான் நிறைந்த அந்தண வேளாண் கணக்கு நாலூ

29 ருடையான் திருவீழிமிழலை உடையான் எழுத்து இப்படிக்கு

கல்வெட்டின் பிற்பகுதி கிடைக்கவில்லை

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : நன்னிலம்
ஊர் : திருவீழிமிழலை
மொழி : தமிழ்
எழுத்து : தமிழும் கிரந்தமும்
அரசு : பாண்டியர்
மன்னன் : சடையவர்மன் சுந்தர பாண்டியன்

ஆட்சி ஆண்டு : 8-ஆவது
வரலாற்று ஆண்டு : கி.பி. 1292*
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 411/1908*
முன்பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 80

இடம் : திருவீழிநாதர் கோயில் மூன்றாம் திருச்சுற்று மேற்குச் சுவர்.

குறிப்புரை : சடையவர்மன் சுந்தர பாண்டியனின் எட்டாம் ஆட்சியாண்டில், திருவீழிமிழலை யில் உள்ள நான்கு மடத்திலும் உள்ள பக்தர்களுக்கும், திருப்பாட்டு ஓது வார்களுக்கும், திருத்தொண்டு செய்வார்களுக்கும், நாற்பத்தெண்ணாயிர பிள்ளைக்கும், பூஜிக்கும் பண்டிதன் ஒருவனுக்கும் அகளங்க நாடாழ்வா என்பவரின் வம்சத்தாருள் ஒருவன். நிலமும் மனையும் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடைபன்மர் த்ரிபுவன சக்கரவத்திகள் சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு எட்டாவது தநு நாயற்று பூர்வபக்ஷத்து அஷ்டமி யும் வெள்ளிக் கிழமையும் பெற்ற ரே

* எபிகிராபியா இண்டிகா தொகுதி XI கட்டுரை எண் 12. பக்கம் 134 எண் 83-ல் இக்கல்வெட்டின் வானியல் குறிப்புக்களை ஆய்வு செய்த திரு. ஜகோபி அவர்கள் இக்குறிப்புக்கள் முதல் இரண்டு சடாவர்மன் சுந்தர பாண்டியன்களுக்கும் பொருந்தி வரவில்லை என்கிறார், இரண்டாவது மன்னனுக்கு கணக்கிட்டதில் கி.பி. 1292-ம் வருடம் டிசம்பர் மாதம் 19-ம் தேதி என்றும். இக்குறிப்புக்களில் உள்ள தவறுகளையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

2 வதி நாள் உய்யக் கொண்டார் [வள]நாட்டு வெண்ணாட்டு திருவீழி மிழலை உடைய [நாயனார்] திருப்பதியில் நாலு மடத்துக்கும் கும்பிட்டு இருக்கும்

3 திருமேனிகளுக்கும் திருப்பாட்டோதும் திருமேனிகளுக்கும் திருதலத் [தொ]ண்டு செய்யும் திருமேனிகளுக்கும் நார்ப்பத் தெ[ண்]ணாயிர பிள்

4 ளைக்கும் மடம் இருபத்தொன்]றுக்கு]ம் உடையாரை பூஜிக்கும் **பண்டித** நுக்கும் மனை இர[ாவளர்] மடம் இருபத்து மூன்று[க்*]கும் **அகளங்க** நாடாழ்வார் **வம்சம் சந்த்ராதித்ய** வரை உள்

5 ளதனையும் . . . . . . பேறு மகமை . . . . . . கையிலெறி மனை . . . . **சந்த்ராதித்ய** வரை உள்ளதனையும் கொள்ளக் கடவ[தற்கு] இப்படிக்கு கல்லி

6 லும் செம்பிலும் . . . . . . இவை **அகளங்க** நாடாழ் வாந் மு . . . வை அழகியார் எழுத்து இவை மொண்ணை மாம[த்]தர் எழுத்து

7 யரி* திருப்பாட்டு . . . . நாயனாற்குக் கழிக்கும் படி ஒன் . . . . மனை இருபத்து நாலு

---

* ஆவது என்பது குறியீட்டால் காட்டப்பட்டுள்ளது

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு	—
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு	கி. பி. 12, 13 - ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	—	ஊர்க் கல்வெட்டு எண்	81
மன்னன் :	கோநேரின்மை கொண்டான்		

இடம் ; திருவீழிநாதர் கோயில் மூன்றாம் பிரகாரத்தில் மேற்குப் புறக்கோபுர உத்தரத்தின் குறுக்குக் கல்

குறிப்புரை : திருவீழிநாதர் கோயில் மூன்றாம் பிரகாரத்தில் மேற்குப் புறக் கோபுர உத்தரக் கல்லாக பயன்படுத்தப் பட்டுள்ள இக்கல்வெட்டுப் பலகை, கொட்டகம் என்ற ஜநநாத நல்லூர் அருவாட்டீஸ்வரமுடையார் கோயிலுக்கு தேவதானமாக நிலம் கொடுத்த செய்தியைக் குறிப்பிடுகிறது. மேற்காணும் அருவாட்டீசுரமுடையார் கோயில் சிதலமடைந்து விட்டதால் திருவீழிமிழலையுடையார் கோயில் கோபுரம் கட்டும் போது கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள இக்கல் பயன் படுத்தப்பட்டிருக்கிறது.

கல்வெட்டு :

1 [ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச்ச]
2 க்கரவர்த்திக[ள்]
3 கோநேரின்மை[ம]
4 கொண்டாந் உ
5 ய்யக் கொண்ட
6 ார் வளநாட்டு வெ
7 ண்ணாட்டு ப்ப
8 ற்றான கோட்ட
9 க மாந ஜநநாத ந
10 ல்லூர் அருவாட்டீ
11 ஸ்வர முடைய[ார் கோயி]
12 ல் தேவகன்மி ஸ்ரீ

13 . . . . யார்க் கணக்கு
14 . . . மடலாக . .
15 ன்றாவாந் கரணத்தா
16 நுக்கு தேவ
17 ர்க்குத் தேவதாந
18 மாக இட்ட ஜந
19 நாத நல்லூர் நி
20 லம் பதிநாறே
21 முக்காணி அை
22 ரக் காணிக் கீழ்
23 முக்காலே ஒரு
24 மாவில் இதில்
25 நீங்கலுக்குடல
26 ாக நீங்கிந நில
27 ம் இரண்டரை
28 யே இரண்டு
29 மாவில் ஜய
30 ங் கொண்ட சோ
31 ழ வளநாட்டு
32 விளநாட்டு அ
33 . . . . , .
34 . . . . . .
35 . . . . .[1]

1 கல்வெட்டு வரிகள் 33, 34, 35 ஆகியவை மிகவும் பழுதடைந்து படிக்க இயலா நிலையில் உள்ளன.

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	21-ஆவது
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1237* ஆம் ஆண்டு
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	400/1908
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	82
மன்னன் :	மூன்றாம் இராசராச சோழன்		

இடம் : திருவீழிநாதர் கோயில் மூன்றாம் திருச்சுற்று வடக்குச் சுவர்

குறிப்புரை : இக்கல்வெட்டு கோயிலுக்கு அளிக்கப்பட்ட சில நிலக்கொடைகள் பற்றி குறிப்பிடுகிறது. திருவீழிமிழலை உடையார் கோயிலில் எழுந்தருளி இருக்கும் தணிந்தயத்தணீஸ்வரமுடையார்க்கு பிராமணன் வாச்சியன் திருவெண்ணாடுடையான் என்பவனும் திருவாணைக்கா நம்பி என்பவனும் 'தூமொழி ஞான சம்பந்தன்' என்ற பெயரில் பலதரப்பட்ட மலர்களைக் கொண்டு நூறு திருப்பள்ளித் தாமமாக்கப்பட நந்தவனம் அமைத்த செய்தியும், ஸ்வாமி தேவர் என்பவர் திருப்பள்ளித் தாமமாக்குகிற திருத்தொண்டர்களுக்கு நிலமளித்துள்ள செய்தியும் கூறப்பட்டுள்ளன. மேலும் திருநந்தவனம் திருத்தொண்டு செய்வார்க்கு பல இடங்களில் இருந்த ஒன்றே எழுமாக்காணி அரைக்காணி நிலம் காணிக்கு மன்னன் இறையிலி அளித்து ஆணையிட்ட செய்தியும், அவ்வாறு மன்னன் கொடுத்தது தமது ஆயுள், ஆரோக்யம், ஐஸ்வர்யம் அபிவிருத்தி ஆகியவை மேலும் பெருகுவதற்காக என்றும் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறு மன்னனது ஆணையை எழுதி செயல்படுத்தியவன் வீர வினோதப் பல்லவரையன் என்ற அதிகாரியாவான், என்றும் அறிந்து கொள்ள முடிகிறது.

---

* எபிகிராபியா இண்டிகா தொகுதி XI கட்டுரை ii எண் 209-இல் இக்கல்வெட்டின் வானியல் குறிப்புக்களை ஆய்வு செய்த பேராசிரியர் ஜகோபி இக்கல்வெட்டும் (400/1908) கல்வெட்டு எண் 17-ம் (410/1908) ஒரே தேதியைச் சேர்ந்தவை என்கிறார். இக்கல்வெட்டு 1237-ம் வருடம் ஜனவரி மாதம் 24-ஆம் தேதியைச் சேர்ந்தது என கணித்துள்ளார்.

1 **ஸ்வஸ்திஸ்ரீ** திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ இராசராச தேவற்கு யாண்டு [உ]டு7 வது கும்ப நாயற்று அபரபக்ஷத்து ஏகாதசியும் சனிக்கிழமையும் பெற்ற

2 மூலத்து நாள்* உடையார் திருவீழிமிழலை உடைய நாயனார்க்கு உய்யக்கொண்டார் வளநாட்டு **ப்ரஹ்மதேயம்** திருவீழிமிழலைப் பிடாகை ஐஞ்சாங் கட்டளை அனபாய

3 வதிக்கு மேற்கு அருமொழி தேவ வாய்க்காலுக்கு வடக்கு ஏழாங் கண்ணாற்று மூன்றாந் துண்டத்துக் கூழைக் காவெந்று பேர் கூவப் பட்ட நிலத்து முன்பு ஸ்ரீ பண்டாரத்துக் காசு புறப்

4 பட்டுக் கொண்ட நிலமும் இன்னாயனார் கோயிலில் எழுந்தருளி இருக்கும் உடையார் தணிந்தயத்தணீ**ஸ்வ**ரமுடையார்க்கு இவ்வூர் **ப்ராஹ்மண**ரில் வாச்சியன் திருவெண்ணாடுடையான் திருச்

5 சிற்றம்பல முடையான் பட்டன் நீர் வார்த்து தந்த நிலமும் திருவாணிக்கா நம்பி ஏழாவது நாளில் வி[லை] கொண்டு தந்த நிலமும் உள்ப்பட னானாவிதமான நூறு திருப்பள்ளித் தாமமாக்கி வருகிற தூ

6 மொழி ஞான சம்பந்தன் திருநந்தவனம் ரூகஙபவகீஹவ[1] இன்னிலம் ஒன்றே மூன்றுமாவரைக்காணிக் கீழ் முக்காலே மூன்று மாவரை காணியும் நூறு திருப்பள்ளித் தாமமாக்குகிற திருத்

7 [தொண்டர்]களுக்கு **ஸ்**வாமி தேவர் தந்தருளின நிலத்துக்கு உடையார் கோயில் ஸ்தானத்தார்க்கு இன்னாயனார் திருநன்[த*]வநங்களில் தூமொ

8 ழி ஞான சம்பந்தன் திருநந்தவனம் திருத்தொண்டு செய்வார்[க்*]கு **பிக்ஷை**க்குடலாக உய்யக் கொண்டார் வளநாட்டுச் செம்பங்குடியில் நமக்குக் காணியும் இறையிலியுமான ஏறிடத்தன் நிலம் ஒன்பது

9 மாவு[ம்] இங்கே தெற்கடைய நிலம் இரண்டு மாவும் பசிப்பிணி மருத்துவன் நிலம் மாகாணியும் . . . நிலம் நாலுமாக்காணியும் கீர்த்தி மார்த்தாண்டப் பேராற்றுக்குத் தென்கரைப்பட்ட

---

1 ரூகஙபவகீஹஙவ— நிலம் ஒன்றே மூன்று மாவரைக்காணிக் கீழ் முக்காலே மூன்று மா அரைக்காணி

10 கமுகு நின்ற நிலம் அரையே முக்காணி அரைக்காணியும் ஆக நிலம் ஒன்றே எழுமாக்காணி அரைக்காணியும் **மகாராஜர்** நமக்குக் காணியும் இறையிலியுமாக தந்(ந்)தபடியே **மகாரா**

11 ஜர்க்கு **ஆயுராரோக்ய**[2] **அயிஸ்வரிய அபிவ்ருத்தி**களுண்டாகவும் நமக்கு **அத்ரஷ்டாத்தமா**கவும் இருபத்தொன்றாவது தைம்மாஸத்து **ஸோம கிரஹண**த்திலே நீர்

12 வார்த்துக் குடுத்தோம் இவ்விளை நிலமும் கமுகு நின்ற நிலமும் இன்னாள் முதல் கைக்கொண்டு இத்தூமொழி ஞான சம்பந்தன் திரு ந[ந்த]வனத்துக்கே **சேசமா**

13 கவும் நமக்கு இறையிலி குலையுமாகில் குலோத்துங்க சோழன் பாசாலியில் நம் காணிப் பற்றான நிலத்து ஏட்டுப்பட்டியான கடமை வற்கங்களுடனே

14 இன்நிலத்தால் வந்த கடமையும் குடிமைகளும் சில்வரி பெருவரி உள்ளிட்டன கூட்டி நாம் இறுக்கவும் நாம்விட்ட நிலம் சந்தராதித்தவற் இறையிலியா

15 கவும் இப்பாசாலியில் நம் காணியான நிலம் நம் பக்கல் பெற்றார் பெற்றாரும் இப்படி இறுக்க கடவர்களாகவும் இப்படிக்கு இக்கோயி லிலே கல்வெ

16 ட்டிக் கொள்வதென்று திருமுகம் எழுதித் திருவெழுத்துச் சாத்தித் திரு**மந்த்ர** ஓலை வீரவினோதப் பல்லவரையன் எழுத்து இருபத்தொன் றாவது நாள் இருநூற்றிருபத்

17 து நாலினால் தேவர் திருமுகப்படி[2]

---

1 ஆயுள் ஆரோக்ய — என்று கொள்ளவும்

2 தேவர் திருமுகப்படி — அரசனது ஆணைப்படி

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	31-ஆவது
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1247
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	403/1908
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	83
மன்னன் :	மூன்றாம் இராசராச சோழன்		

இடம் : திருவீழிநாதர் கோயில் மூன்றாம் திருச்சுற்று வடக்குச் சுவர்.

குறிப்புரை : திருவீழிமிழலை உடையார் கோயிலில் உள்ள நின்றருளிய நாயனாரும், நெறிவார்க் குழலியும் எழுந்தருளியிருக்கும் சந்நிதியிலும் மேலும் இக்கோயிலிலுள்ள நாயன்மார் திருக்கோயில்களிலும் திருப்பணிக் குறைகள் இருந்தது. அதனால் இவ்வூரிலுள்ள தச்சாசாரியன், நந்துணையாழ்வானான திருச்சிற்றம்பல ஆசாரியன் என்பவன், திருவீழிமிழலை உடையார் கோயிலிலுள்ள, ஸ்ரீமாஹேஸ்வரக் கண்காணி செய்வார்களையும், ஸ்ரீகாரியஞ்செய்வார்களையும், தேவர் கன்மிகளையும், கோயில் கணக்கனையும் சந்தித்து மேற்கூறிய திருப்பணிக் குறைகளை [repairs] தான் செய்வதாகவும், கோயில் தச்சாசாரியக் காணி நிலத்தை தனக்குத் தச்சாச்சார்யக் காணியாகவும் பிரதிஷ்டை செய்வதற்கான அன்பளிப்பாகவும் இறையிலி செய்து தர வேண்டுமென்று கேட்க, அவர்களும் அவ்வாறே ஆசாரியனுக்கும் அவன் வழிவந்தார்க்கும் கோயில் குடிமை அந்தராயம் போன்ற வரிகளைத் தவிர்த்து இறையிலியாக வழங்கிய செய்தி கூறப்படுகிறது. அவ்வாறு கொடுக்கப்பட்ட நிலம் காலும், குடியிருப்பு மனை நிலம் குழி இருபதும் ஆகும். இந்நிலங்களை கோயில் மாஹேஸ்வரக் கண்காணி திருவீதிகோட்பிலியாண்டானும், ஸ்ரீகாரியம் தில்லையம்பல மூவேந்த வேளானும் கையெழுத்திட்டு கொடுத்தனர் என்றும் தெரிய வருகிறது.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்தி ஸ்ரீ** திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு முப்பத்து ஒன்றாவது, ஆனி மாதம் இருபத்து ஐஞ்சாந் தியதி நாள் உய்யக் கொண்டார்

2 வளனாட்டு வெ[ண்*]ணாட்டு உடையார் திருவீழிமிழலை உடையார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவர் திருவருளால் ஸ்ரீ மாஹேஸ்வரக் கண் காணி செய்வார்களும் சிகாரியஞ் செய் வா[ர்*]களும்

3 தேவர்கன்மி கோயில் கணக்கனும் எழுத்து தச்சாசாரியம் நத்துணை யாழ்வானான[1] திருச்சிற்றம்பல ஆசாரியன் கண்டு உடையார் நின்

4 றருளிய நாயனாரும் நெறிவார் குழலி நாச்சியாரும் எழுந்தருளி நின்ற இடத்துப் பிறந்த திருப்பணிக் குறைகளும் மற்றும் இத்திருக் கோயிலில்

5 னாயன்மார் திருக்கோயில்களில் பிறந்த திருப்பணிக் குறைகளும் தான் கூட நின்று[யினில்] தான் இப்படி (கள) முடித்தபடிக்கு இக்கோயில்

6 தச்சாசாரியக் காணி தனக்கே காணியாகப் பெற்று இத் தச்சாசாரியப் பேற்றுக்குப் பெற்று வரும் பேறுகளும் பெற்று **ப்ரதிஷ்டா தக்சணைக்கு**

7 [த]னக்குக் காணியும் இறையிலியுமாக இட்டி இனாயனார் தேவதானம் ஜயங்கொண்ட சோழ நல்லூர் பட்டாலவதிக்குக் கிழக்கு இராச

8 ராசவதிக்கு வடக்கும் உகூ 2 சதிரத்து ஆண்டார் அண்டக்குடையார் தாண்ட கைச்சதிரர் தம் அபாவத்துத் திருனாமத்துக் காணியாகத் தந்த

9 நிலமாயக் காணியும் இறையிலியுமாக இட்ட ரூ வ இந்நிலம் காலும் குடியிருப்பு மனைக்கு இட்ட ஊர் நத்த[த்*]துக் குழி உய இக்குழி இருபதும் இந்நிலம் காலும்

10 லும் தனக்குத் தச்சாசாரியத்துக்கும் **ப்ரதிஷ்டாதக்சணைக்கும்** தனக்கும் தன் வற்கத்தாற்கும் இறையிலியாக அனுபவிக்கவும் **க்ரயவிக்ர** யங்களுக்கு உரித்தாகவும்

11 இன் நிலத்துக்கு அந்தராயங் கோயில் குடிமை உள்ளிட்டுக் கொள் ளும் வற்கங்கள் தவிரவும் இப்படி **சந்த்ராதித்த**வரை தனக்குக் காணியும்

12 இறையிலியுமான படிக்கு இத்திருக்கோயிலிலே கல்வெட்டிக் கொள்ள வும் சொன்னோம் அருளால் கோயில் கணக்குத் திருவீழிமிழ

13 லையுடையான் மிழலை வேந்து மென்[று]ணைய் கண்டான் மெய் யாழ் நான்மறை வேளான் எழுத்து உ நத்துணை ஞான சம்பந்த

14 ன் எழுத்து:- இந்நிலம் காலும் நத்தம் குழி இருபதும் இக்கோயில் தச்சாசாரியக் காணியாக குடுத்தமைக்கும் இவை சீமாஹேஸ்வரர்க் க

15 ண்காணி திருவீதிக் கோட்ப்புலி ஆண்டான் எழுத்து:- இப்படிக்கு குடுத்தமைக்கு சீகாரியம் தில்லையம்பல மூவேந்த வேளான் எழுத்து:-

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	2-ஆவது
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு :	
ஊர் :	திருவீழிமிழலை		
மொழி :	தமிழ்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	402/1908
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	84
மன்னன் :	மூன்றாம் இராசேந்திர சோழன்		

இடம் : திருவீழிநாதர் கோயில் மூன்றாம் திருச்சுற்று வடக்குச் சுவர்.

குறிப்புரை: இராசேந்திர சோழனின் இரண்டாம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக் கல்வெட்டு. திருவீழிமிழலை உடையார் கோயில் திருநாவுக்கரசர் மடத்து மாஹேஸ்வரர்களுக்கு (துறவிகளுக்கு) மடசேஷமாக (மடப்புறமாக) வந்த நிலங்கள், விலை கொண்ட நிலங்கள், மனை, கொல்லை, படுகை ஆகியவைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அவற்றின் அளவுகள், எல்லைகள் அவை யாரிட மிருந்து வாங்கப்பட்டன என்பன போன்ற செய்திகள் கூறப்பட்டிருக்கின்றன.

கல்வெட்டு .

1 **ஸ்வஸ்தி ஸ்ரீ** திரிபுவனச் சக்கரவத்திகள் சீ ராசேந்திர சோழ தேவற்கு யாண்டு இரண்டாவது, பங்குனி மாதத்தொருநாள் உய்யக்கொண்டார் வளநாட்டு

2 வெண்ணாட்டு உடையார் திருவீழிமிழலை உடையார் திருமட விளாகத்து **ப்ரஹ்மதேயம்** திருவீழிமிழலை திருநாவுக்கரசன் திருமடத்து வத் . . . . திக்கும் **மாஹேஸ்வர**[ர்*]களுக்கு மடசேஷமாக புகுந்த நிலங் ளும் விலை கொண்ட நிலங்களும் மனைகளும்

3 கொல்லையுய் படுகையுமாவது குலோத்துங்க சோழ வளநாட்டு முளியான குலோத்துங்கச் சோழன் இளங்காரி குடியில் கருப்புடையா[ர்] புற்றிடங் கொண்டார் தந்த பந்தலடி ரூ-கூமகூம் இத்தடியில் கிழக் கடைய சிறுகுடையார் திருநட்டப் பெரு

4 மாள் தந்த ரூ-உபசூம் திருக்கருகாவூர் முதலியார் உருத்திரதேவர் தந்த கொல்லன் கால் ரூ-வம் இராவளர் இந்திரசிவர் திரவியமாய் புளியங் குடையார் அணுக்கர்க்குக் குடுத்து இவர் பக்கல் கணக்கிரயமாக விலை கொண்ட ரூ-ிலிம் சிறுகுடையார் திருவம்

5 பலச் சொக்கர் பக்கல் விலை கொண்ட ரூ-உபம் காலிங்கராயப் பல்லவ ரயன் பக்கல் தானம் பெற்ற ரூ-கபம் இவன் பாரியை கண்ணுடை நாச்சி பக்கல் இவள் த[வப்]பன் வீதி விடங்க பல்லவரையனை முதுகண்ணாகக் கொண்டு விலை கொண்ட ரூ-லமும் தானம் பெற்ற ரூ-லமுமான

6 நெட்டைப்பத்து ரூ-வபல் தாழை மடை ரூ-ருஉபம் ஆழ்வார் கோயிலுக்கு மேற்கு நாற்றங்கால் ரூ . ம் கருப்போடி வாய்க்காலுக்குக் கிழக்கு நாற்றங்கால் ரூ . . பம் ஆழ்வார் கோயிலுக்கு குடு[த்*]த நத்தங்குழி எம் இராவளர் திருஞான சம்பந்தர் ரூ-ல மாய்ப் புகுந்த மாதேவி ரூ-லம்

7 இளங்கடா சானை ரூ-உபசூம் நந்தங்குழி சம ம் ஆண்டார் சகரதேவர் இந்த இராவளர் பக்கல் [விலை] கொண்ட குழி சமம் அ . . . . தமிழ் ஞான சம்பந்தர் தந்த ரூ-கம் இவர் மகன் செய்ய மேனியர் தந்த ரூ-உபசூம் சீகாழி மாளிகை மடத்து முதலியார்

8 தில்லை நாயகர் திருமேனி பக்கல் சிறுகுடையார் திருவம்பலச் சொக்கர் இவர் மடத்துக்குக் குடுத்து இவர் பக்கல் விலை கொண்டு புகுந்த[ந]ல்லிசை ஞான சம்பன்தந் விளாகம் ரு நத்தங் குழி சூமம் ஆலத்துடையார் தந்தரூ-வம் நாட்டியத் தாங்குடையார் புகலிப் பெருமாள் தந்தரூவம் ஆலத்து

9 டையார் சங்காண்டார் பக்கல் விலை கொண்ட ரூ வலம் விசூர் கிழவன் பக்கல் விலை கொண்ட நத்தங்குழி உபம் போறகளக் குடையார் ஆளுமரையர் சேகி கிழார்* [கா]டவராயர் பக்கல் விலை கொண்டு தானந்தந்த நத்தங்குழி கமம் ஆழ்வார் கோயிலுக்கும் கிழக்கு மேற்படியார் தன்த நத்தங் குழி

10 மம் ஆக ரு ரூ-பசூம் நத்தங்குழி உாமம் உய்யக்கொண்டார் வளநாட்டுச் செம்பங்குடியில் சிறுகுடையார் இராசிங்க பன்மர் பக்கல் விலை கொண்ட ரூ-உபசயும் இவர் தானந் தந்த ரூ-உபசயும் அயன் மங்கல முடையார் பாரியை பக்கல்

---

* சேக்கிழார் என்றிருத்தல் வேண்டும்

11 இராசிங்க பன்மர் விலை கொண்டு இவர் பக்கல் விலை கொண்ட ரூஉபம் அயன் மங்கல முடையார் சாந் . . ரைக் காப்பார் தம் அபாவத்து இம்மடத்துத் திருப்பாட் டோதும் திருமேனிகளுக்கும் **மாஹேஸ்வரர்**களுக்கும் **சேசமாக** [ே]காலியப் பாடி

12 உடையார் கையில் சாதனம் பண்ணி . . . . கறையான் கொள்ளி ரூ௩பம் தோட்டக் குறை ரூ௰பசயும் நத்தங்குழி உ௰ம் சிறு குடையார் பூவேந்திர சோழர்

13 தந்த ரூ௬ம் ஆக ரூ௱௫சயும் நத்தங்குழி உ௰ம் **ப்ரஹ்மதேயம்** [கௌதமன் **கங்காதரன்** சீராமபட்டன் பாரியை வஞ்சியாண்டாள் [சா]னியார் பக்கல் இவர் மகன் திருவுடை மருதுடையானார் முதுகண்ணாகக் கொண்டு விலை கொண்ட இவூர் ௬க

14 பிலாவடி ரூஉபம் பூசிக்கும் சிவலோக (லோக)முடையார் எதிற் வைக்கு [ர]ண **க்ரம**மாக இவர்கள் பக்கல் விலை கொண்டு மட**சேச**மாக தந்த இத்தடி ரூ -ம் அரிசிலாற்றங்கரைப் படுகையில் தவன **சர்வக்ரது** நாராயணப் பட்டந் (பக்கல்) பக்கல் விலை கொண்ட

15 குழி ௩ரூயம் மஹாதேவர் பட்டர் பக்கல் விலை கொண்ட குழி ளசு[ய]ம் கோவிந்த நாயக்கர் ப[க்*]ல் விலை கொண்ட குழி ரூ௰ம் **கம்ச** தேவப் பெருமாள் பக்கல் விலை கொண்ட குழி ச௰ம் க௯ பூதி பன்றியாழ்வான் பக்கல் கீழ்ப்பரவையில் கொண்ட படுகை குடுத்து

16 பரிவத்தித்த குழி ாம் நல்லூர் சேரியில் **சபா**பதி நாராயணப் பிள்ளை பக்கல் விலை கொண்ட குழி ச௰ம் ஆக ரூவ௬ம் படுகை குழி ௰ம் கொல்லை குழி ச௰ம் விஷ்ணு வத்தண புரத்து குமார மங்கல முடையார் அழக விடங்கப் பெருமாள் மாதாக்கள் இவரை முதுகண்ணாகத் தந்த

17 திருத்துக்குழி ாச௰ ம் ஆலம்பாக்கிழார் நாகாண்டார் தந்த வண்ணான் குண்டு குழி உயச ம் இவர் . . . .* மேற்பட குழி உயம் ஊர் நத்ததுக்கு கீழை . . . . . குவில் பொன்னாப் புடையார் நத்தத்துக்கு வடக்கும் குழி ச௰ம் உடையார் ஸ்ரீ கையிலாஸ முடையார் திருமட

18 விளாகத்துக்குழி எயம் ஊருக்கு மேற்கு ஊர்ப் பொதுவாய் ஊர் வாத . . . அரசடி குழி ாம் ஆக குழி [சத] . . . .*

---

* இக்குறியிடப்பட்ட பகுதிகளிலுள்ள எழுத்துக்கள் சுண்ணாம்பு பூச்சினால் மறைக்கப் பட்டுள்ளன.

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு	21 - ஆவது
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு	கி.பி. 1265
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	399 / 1908
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	85
மன்னன் :	மூன்றாம் இராசேந்திர சோழன்		

இடம் : திருவீழிநாதர் கோயில் மூன்றாம் திருச்சுற்று வடக்குச் சுவர்,

குறிப்புரை : இக்கல்வெட்டு நிலம் விற்றுக் கொடுத்த செய்தியைக் குறிப்பிடுகிறது. மூங்கிற்குடையான் பொறப்பட்டன் சந்திரசேகரன் என்பவன், நெற்குப்பை உடையார் உய்யவந்தான் ஒற்றிக் கொண்டான் என்பவருக்கு தன்னுடைய விளைநிலத்தையும் மனையையும் விற்றுக் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. விளை நிலம் முக்காலே நாலுமாவின் விலை அன்றாடு நற்காசு ஆயிரம் என்றும், மனைநிலத்தின் விலை அன்றாடு நற்காசு முன்னூறு என்றும், விற்றுக் கொடுத்த விளைநிலத்தின் பெயர் மல்லன்கண்டம் என்றும் கூறப்பட்டுள்ளது. விற்கப்பட்ட நிலத்திற்கு எல்லைகள் கூறும் போது, திருநாவுக்கரசன் மடம். பூபேந்திர சோழன் வாய்க்கால் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்திஸ்ரீ**

2 திருபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு உ௰ச* இருபத்தொன்றாவது[1] இஷப நாயற்று பூறுவ பக்ஷத்து ஷஷ்டி

* இக்கல்வெட்டில் மன்னனின் ஆட்சியாண்டு எழுத்தால் எழுதும் போது 24 என்றும் எண்ணால் கூறும் போது 21 என்றும் உள்ளது. ஆனால் வானியல் குறிப்பின்படி 21 என்பதே சரியானது எனத் தெரிகிறது.

1 ஆவது என்பது குறியீட்டால் காட்டப்பட்டது.

3 யும் நாயற்றுக் கிழமையும் பெற்ற பூசத்துநாள் ஜயங்கொண்ட சோழ வளநாட்டு திருவெழுந்தூர் நாட்டு மூங்கிற் குடையான்

4 பொற்ப்பட்டன் சந்திரசேகரனேன் நிலவிலைப் பிரமாண இசைவு தீட்டு பாண்டி குலாசனி வளநாட்டு தஞ்சாவூர் கூற்றத்து நெற்

5 குப்பை உடையார் உய்ய வந்தான் ஒற்றி கொண்டார்க்கு நான் விற்றுக்குடுத்த மனையும் நிலமுமாவது குலோத்துங்க

6 சோழ வளநாட்டு பாம்பூர் நாட்டு நீர் முளியான குலோத்துங்க சோழன் இளங்காரி குடியில் ஓமலூருடையான் கணபதி ஆழ்வான்

7 தபத்தாயர் பக்கல் கொண்டுடையேனான என்னுதான மல்லன் கண்டம் என்று பேர் [கூ]வப்பட்ட நிலத்துக்கு தென்பாற்கெல்லை

8 உள்ளூரை ஊட்டிறுத்து* புறவூர் அவிசிய மங்கலத்துக்கு நீர் பாய்கிற வாய்க்காலுக்கு மேற்[கும்] தென்பாற்கெல்லை கழுமலவன் திருச்சிற்றம் பல

9 முடையான் நிலத்துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை **ப்ரஹ்ம**தேயம் திரு வீழிமிழலை திருநாவுக்கரசன் மடக்காணிக்கு கிழக்கும் வடபாற்கெல்லை

10 பூவேந்திரசோழன் வா[ய்*]க்காலுக்கும் இம்மடக்காணிக்கும் தெற்கும் ஆக இசைந்த இன்னான்கெல்லையான நடுவுபட்ட விளை ௬௯௯ இந்நிலம்

11 முக்காலே நாலுமாவும் விற்றுக் குடுத்துக் கொள்வதான எம்மிலிசைந் த விலைப்பொருள் அன்றாடு[ந]ற்காசு ௲ இக்காசு ஆயிரமும் இன்னமும்

12 இவர்க்கு விற்றுக் குடுத்த ஊர் நத்தத்து இறையிலி மனையில் தெற் கில் தெருவில் வடசிறகில் எனக்கும் என் பிராதாக்களுதுமான மனைக்கு கீழ்பாற் கெல்லை

13 சிறுகுடையான் திருவீழிமிழலை உடையார் மனைக்கு மேற்கும் தென் பாற்கெல்லை தெருவுக்கு வடக்கு மேல்பாற்கெல்லை மேலைத்தெரு வுக்கு

14 கிழக்கும் வடபாற்கெல்லை கழுமல முடையான் திருச்சிற்றம்பலமுடை யான் மனைக்கு தெற்கும் ஆக இசைந்த இன்னான் கெல்லையான நடுவு

---

* ஊடறுத்து என்பது ஊட்டிறுத்து என்று தவறாக எழுதப்பட்டுள்ளது.

15 பட்டமனைகுழி கூய இக்குழி முப்பதில் என்னோபாதி குழி ய இக்குழி பத்தும் விற்றுக் குடுத்துக் கொள்வதான எம்மிலிசைந்த விலைப் பொன்* அன்றாடுங்

16 நற்காசு கூா இக்காசு முன்னூறும் ஆக விளை நிலம் முக்காலே நாலு மாவும் இறையிலி நத்த[த்*]து மனைகுழி பத்துக்கும் பிரமாண விலைப் படி காசு சூகூா இக்காசு ஆயிர

17 த்து முன்னூறும் ஆவணக் களியிலே காட்டேற்றி கைச்செலவறக் கைக் கொண்டு விற்று விலைப்பிரமாண இசைவு தீட்டுக் குடுத்தேன் நெற் குப்பை உடையான்

18 உய்ய வந்தான் ஒற்றிக் கொண்டா[ர்*]க்கு மூங்கிற் குடையான் பொற் பட்டன் சந்திரசேகரனேன் இந்நிலத்திலும் ஊர் நத்தத்தும் 'இறையிலி மனையிலும்* மேனோ

19 க்கின மரமும் கீழ்னோக்கின கிணறும் பொதுவும் போதாதியும் மற்றும் எற்பேற்பட்ட பாகாசரிய உரிமைகளும் அகப்பட விற்றுக் கொடுத்தேன் நெற்குப்பை உடை

20 யான் உய்யவந்தான் ஒற்றி கொண்டான்க்கு** நெற்குப்பை உடை யார் சந்திரசேகரனேன் இக்காசு ஆயிரத்து முன்னூற்றுக்கும் இவ்விளை நில முக்காலே நாலுமாவும்

21 இறையிலி நத்த[த்*]து மனைகுழி பத்தும் உட்பட விலையாவதாகவும் இதுவே பொருள் மாவறுதிப் பொருள் செலவோலை யாவதாகவும் இது வல்லது வேறு

22 பொருமாவறுதிப் பொருள் செலவோலை காட்டக் கடவதல்ல வாகவும் இன்னி[ல*]த்துக்கும் மனைக்கும் இவர் வேணும் என்ற போதே பிர மாணம் பண்ணி

23 க் குடுக்க கடவேனாகவும் குடுத்திலேனாகில் இப்பிரமாண இசைவு தீட்டே பிரமாண மாகவும் இப்ப[டி*] சம்மதித்து விலைக்கற விற்று பொருள

24 றக் கைக்கொண்டு விற்று விலைப் பிரமாண இசைவு தீட்டுக் குடுத்தேன் நெற்குப்பை உடையான் உய்யவந்தான் ஒற்றிக் கொண்டா[னு*]க்கு மூங்கிற் குடையான்

25 பொற்பட்டன் சந்திரசேகரனேன் இவர் சொல்ல இப்பிரமாண இசைவு தீட்டு எழுதினேன் ஜ[ய*]ங்கொண்ட சோழ வ[ளநாட்]டு பேரா[வூ]ர் நாட்டு நெற்குப்பை

26 உடையான் தேவரன்பானேன் இவை என் எழுத்து இப்படி அறிவேன் நெல்வேலி உடையான் அவையம் புக்க வள[வநாக]ன் இப்படி அறிவேன் கீரனூர்க் கிழவன்

27 திருச்சிற்றம்பல முடையான் மொண்ணப் பிள்ளை என்[1]

1 மொண்ணப் பிள்ளையேன் - என்றிருத்தல் வேண்டும்.

த. நா. தொ. ஆய்வுத்துறை

தொடர் எண் : 594 / 1977

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	6-ஆவது
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1302[1]
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	401/1908
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பாண்டியன்	ஊர்க் கல்வெட்டு எண்	86
மன்னன் :	ஜடாவர்மன் வீரபாண்டியன்		

இடம் : திருவீழிநாதர் கோயில் மூன்றாம் திருச்சுற்று வடக்குச் சுவர்.

குறிப்புரை : ஜடாவர்மன் வீரபாண்டியனின் ஆறாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த இக் கல்வெட்டில், திருவீழிமிழலை உடையநாயனார் கோயிலில் உள்ள கோதுகுல நாயகர் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவர்க்கு திருநறையூர் நாட்டு பெரியங் குடையான் அரையன் திருவம்பலச் சொக்கன் என்பவன், தன்னுடைய காணி யாகிய நிலத்திலிருந்து இரண்டே கால் மாவினை திருநாமத்துக் காணியாக அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது. மேற்கூறிய அரையன் திருவம்பலச் சொக்கனின் கையெழுத்தும், அவர் கூற இந்த செய்தியை பிரமாணமாக எழுதிய ஆநலூருடையான் வீதி விடங்கப் பெருமாளின் கையெழுத்தும் இடப்பட்டுள்ளன.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்தி ஸ்ரீ** கோற்சடா பந்மர் திருபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீர பாண்டிய தேவற்கு யாண்டு கூ[2] ஆறாவது

---

1 எபிகிராபியா இண்டிகா தொகுதி II-ல் கட்டுரை 12. பக்கம் 137 எண் 90ல் இக் கல்வெட்டின் வானியல் குறிப்புகளை ஆய்வு செய்த பேராசிரியர் ஜகோபி அவர்கள் இக்கல்வெட்டு கி.பி. 1302 ஆண்டு செப்டம்பர் மாதம் 28ம் தேதியைச் சேர்ந்தது என கணித்துள்ளார்.

2 'ஆவது' என்பது குறியீட்டில் காட்டப்பட்டுள்ளது.

2 கன்னி நாயற்று பூறுவ பக்சத்து சட்டியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற மூலத்து நாள் உய்யக் கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு உடையார்

3 திருவீழிமிழலை உடைய நாயனார் கோயிலில் நாயனார் அருள்முக்கிய கோதுகுல நாயகர் கோயிலில் ஆதிசண்டேசுர தேவகன்மிகளுக்கு

4 குலோத்துங்க சோழவளநாட்டு திருநறையூர் நாட்டு பெரியங்குடையான் அரையன் திருவம்பலச் சொக்கனேன் இந்த பெரியங் குடியில்

5 என் காணியான நிலத்து இன்னாய நாற்கு பூசைக்கும் திருப்பணிக்கும் உடலாக திருநாமத்துக் காணியாக இற்றை நாளால் குடுத்த விளை நிலமாவது

6 இவ்வூர் தென்பக்கத்து எட்டி சிறுவேளூர் எல்லைக்கு மேற்கும் தெற்கும் குடுக்கின்றேன் நிலத்துக்கு கிழக்கும் வடக்கும் இன்னான் கெல்லை நடுவுபட்ட

7 . . மாக்குடையான் மனை இருப்பு தடி ஒன்றினால் ரு. கூம் இதன் தெற்கு தடி இரண்டினால் ரு. கூம் இதன் தெற்கு கம்பிக்காத மன் இருப்பு ருவசூம்

8 ஆக ருஉகூப இன்னிலம் ஒன்றே அறுமாவும் இன்னமும் இன்னாய நாற்கு திருநாமத்துக் காணியாக குடுத்த கீழ் பாற்கெல்லை குடுக்ன்றேன் நிலத்துக்கு மேற்கும்

9 வடக்கும் வடபாற்கெல்லை எட்டி சிறுவேளூர் எல்லைக்கு தெற்கும் மெல்பாற்கெல்லை இற்றை நாளால் இன்னாயநாற்கு குடுத்த நிலத்துக்கு கிழக்கும் இன்னான் கெல்லையான நடுவுப்பட்ட

10 அயந் கட்டைய் தடி ஒன்றினால் ருகூம் இதன் தெற்கு தடி இணறுனால்[1] ருவஉம் இதன் கிழக்கு தடி ஒன்றினால் ருவசூம் ஆக ருஹகூ இன்னிலம் முக்காலே

11 நாலுமாவும் ஆக ருஉவ இன்னிலம் இரண்டே காலும் திருநாமத்துக் காணியாக கு[டு]*த்தேன் இன்னிலத்து மேல் கோக்கின[2] மரமும் கீணேக் கின கிணறும் பொதுவும் போகாதியும் பாகமும்

---

1. இரண்டினால் -என்றிருக்க வேண்டும்

2. நொக்கின - என்றிருத்தல் வேண்டும்

12 பாகாசிரியமும் மற்றும் எற்பேற்பட்ட உமைகளும் உள்பட திருநாமத்துக் காணியாக குடுத்தேன் இப்படிக்கு இப்பிரமாணப் படியே [த]டி தோறும் திருச்சூலதாபனம் பண்ணிக் கொள்ளக் கட

13 வர்களாகவும் இப்படிக்கு கல்வெட்டிக் கொள்ளக் கடவர்களாகவும் இப்படி சம்மதித்து . . . . . நிலம் இரண்டே காலும் திருநாமத்துக் காணியாக குடுத்தேன் நாய . . . . *னார்

14 அருள் முக்கிய கோது குல நாயகர் பேரால் ஆதிசண்டேசுர தேவகன்மி களுக்கு பெரியங்குடையான் அரையன் திருவம்பலச் சொக்கனேன் இந்த விளை நிலம் இரண்டேகாலும் திருநாமத்

15 துக்காணி [யாகத்தந்]தமைக்கு இவை பெரியங்குடையான் அரையன் திருவம்பலச் சொக்கன் எழுத்து இவர் சொல்ல இந்த பிரமாணம் எழுதினேன் ஆருலூருடையான் வீதி விடங்கப் பெருமாள்

26 எழுத்து

---

* புள்ளியிடப்பட்டுள்ள இடத்தில் தவறாக எழுதி பின்னர் செதுக்கி அவ்விடத்தை அடைப்புக் குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு	15 - ஆவது
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு	கி.பி. 1193
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	434 / 1908
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	92
மன்னன் :	மூன்றாம் குலோத்துங்க சோழன்		

இடம் : திருவீழிநாதர் கோயிலிலுள்ள மூலநாதர் சன்னிதியின் கிழக்குச்சுவரில் உள்ளது.

குறிப்புரை : திருவீழிமிழலை உடையார் தேவதான ஊராகிய ஜயங்கொண்ட சோழ நல்லூர்க்கு கீர்த்தி மாத்தாண்டப் பேராற்றில் துளை அமைத்து (வாய்த்தலை) பட்டாலிவதி என்ற வாய்க்கால் மூலம் நீர் பாய்ந்து வரப் பெற்றது. ஆனால் கீர்த்தி மார்த்தாண்டப் பேராற்றிலிருந்து நீர் வரும் வாய்த் தலையாகிய துளை மணல் மேடிட்டு நீர் வருவது சுருங்கிவிட்ட காரணத்தினால் அவ்வூரில் நெல் பயிர் செய்வதற்கு உற்பத்தி செய்திருந்த 'நாத்து' (நாற்று) விடுகின்ற காரணத்தினால் ஜெயங் கொண்ட சோழ நல்லூருக்கு அதே கீர்த்தி மார்த் தாண்டப் பேராற்றில் வேறொரு இடத்தில் துளையிட்டு நீர் கொண்டு வர ஏற்பாடு செய்யப் பட்டது.

அதன்படி வளவன் அன்னியூரிலே உள்ள திருநாமத்துக் காணி நிலத்து [கோயில் நிலம்] எல்லையிலே அவ்வாற்றில் துளையிட்டு அதிலிருந்து நீர் கொண்டு வர ஒரு வாய்க்கால் வெட்டி அவ்வாய்க்கால் மூலம் வரும் நீரை வளவன் அன்னியூருக்கும் மணி நாகன் குடிக்கும் நீர் வரும் வாய்க்காலிலே விட்டு; பின்னர் ஜெயங் கொண்ட சோழ நல்லூருக்கு நீர் பாயும் பட்டாலி வதியில் அந்நீரை விழச் செய்து ஜெயங் கொண்ட சோழ நல்லூரில் பயிர் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்று பல்லவராயன் என்ற அதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்க மன்னன் ஆணையிட்ட செய்தியை தெரிவிக்கிறது இக்கல்வெட்டு.

திருமந்திர ஓலை போன்ற சில அதிகாரிகள் கையெழுத்திட்டுள்ள செய்தி யும் உள்ளது.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவனச்சக்ரவர்த்திகள்** மதுரையும் பாண்டியன் முடித்தலை யுங் கொண்டருளிய ஸ்ரீகுலோத்துங்

2 க சோழ தேவர்க்கு யாண்டு ௰௫சவது [நா]ள் ௪௰௨னால் **ப்ரஸாதஞ்** செய் தருளின திருமுகப்படி **த்ரிபுவனச்சக்ரவத்தி**

3 கோநேரிம்மை கொண்டான் உய்யக் கொண்டார் வளநாட்டு வளவன் அன்னியூரு[ம்] மணிநாகன் குடியும் ஊரவர்

4 க்கு உடையார் திருவீழிமிழலை உடையார் தேவதானம் இந்நாட்டு ஜயங்கொண்ட சோழ நல்லூர்க்கு கீத்தி மாத்

5 தாண்டப் பேராற்றிலே துளை பெற்று நீர் பாய்ந்து வருகிற பட்டாலி வதி என்கிற வாய்த்தலை அகவாய் மணலிடு நீர் வ

6 ழக்கஞ் சுருக்கமாயிருக்கையாலே இவ்வூர் நாத்திட்டுப் பட்டுவாரா நின்ற தென்றும் கீத்திமாத்தாண்டப் பேராற்றிலே இது

7 தேவர்க்கு வளவன் அன்னியூரிலே திருநாமத்துக் காணியான நிலத்து எல்லையிலே வாய்த்தலை இட்டு இந்நிலத்தி லே

8 ல் ஒருவார் கால் இவ்வூர்க்கும் மணிநாகன் [கு]டிக்கும் வார்காலாய் வருகிற வாய்க்காலிலே விழக் கல்லி இவ்வாய்க்கா

9 லே நீர்க்கொ[ண்டு] பாய பட்டாலி வதி என்கிற வாய்க்காலிலே விழ விட்டு ஜயங்கொண்ட சோழநல்லூர்க்கு நீர்பாயக் கடவதா

10 க பெற வேணுமென்று பல்லவராயன் நமக்குச் சொன்னமையில் இப்படி செய்யக்கடவதாகச் சொன்னோம் இவ்வூர்க்கு நீர் [பா]

11 ய இவ்வாற்றிலே தலை பெற இத்தேவர்க்கு [வளவன்] அன்னியூரில் திருநாமத்துக் காணியான நிலத்து எல்லையிலே வாய்த்தலையும்

12 இட்டு இந்நிலத்திலே ஒரு வாய்க்காலும் தங்களூர்க்கு வார்காலாய் வருகிற வாய்க்காலிலே விழக்கல்லி இவ்வா

13 ய்க்காலாலே நீர் கொ[ண்]டு போகக் கடவதாகப் பண்ணாக எழுதி னான் திருமந்திர ஓலை இராஜேந்திர சிங்க மூ

14 வேந்த வேளான் என்றும் இவை குருகுலராயன் எழுத்தென்றும் மழவ ராயன் எழுத்தென்றும் விழிஞத்

15 தரயன் எழுத்தென்றும் காடுவெட்டி எழுத்தென்றும் வயிராதராயன் எழுத்தென்றும் அமர கோன் எழுத்

16 தென்று இட்டு :-

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	16-ஆவது
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1194
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	93
மன்னன் :	மூன்றாம் குலோத்துங்கன்		

இடம் : திருவீழிநாதர் கோயிலில் உள்ள மூலநாதர் சன்னதி தென்புற அதிட்டானத்தில் உள்ளது.

குறிப்புரை : திருவீழிமிழலை உடையார் கோயில் திருமடை வளாகத்தின் வடக்கில் திருவீதியில் உள்ள குகைக்கு ஆண்டார் நல்லிசை ஞான சம்பந்தர் என்பவர் பலரிடம் அந்ய நாம கரணத்தின்படி நிலம் விலைக்கு வாங்கிய செய்தியும் அதன் எல்லைகளும் கூறப்பட்டுள்ளது. கல்வெட்டு இடையிடையே சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1 திரிபுவனச்சக்கரவத்திகள் மதுரையும் ஈழமும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்க சோழ

2 தேவர்கு யாண்டு ௰௬வது உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு உடையார் திருவீழிமிழலை உடையார் திருமடை வளாகத்து வடக்கில் திருவீதியில் ப்ரஹ்மதேயம் திருவீழிமிழலை ஊர் நத்தத்து ஆண்டார்

3 நல்லிசை ஞானசம்பந்தர் பலர்பக்கலும் ஆந்ய நாம கரணத்து விலை கொண்டு இக்குகை . . . இந்த நத்தக்குழி கூட்டின படி ஊர் நத்தது கீழை திருவிழா வீதியில் கீழைத் தெருவுக்கு கிழக்கு [இ]தன் தா . . . .

4 முப் பெருவழிஆன . திருவீதிச் செவ்வைக்கு தெற்கு . . . ராகவர் சீகோயிலுக்கும் திருமுற்றத்துக்கும் மேற்க்கு காளி குளங்கரைக்கு வடக்கு நடுவுபட்ட இ உலோச்சியன் நாகதேவன் உய்யக்கொண்டான் . . . .

5 பேரில் ஸபை விலை கொண்ட குழி ௫௰ம் இவர் பேரில் வாச்சியன் விக்நேசுர நம்பி பக்கல் வாச்சியன் கரை ஏற விட்டான் விலையால் குழி ௰௬ம வாச்சியன் மாதவாண்டார் பக்கல் **கவு**தம[ன்] . . . .

6 . . . கொண்ட குழி ௰௨ம் ஆக குழி ௮௰௭ இக்குழி எண்பத்தேழுக்கு வடமேற்க் கடைய **கவு**தமன் அம்[ப]லத்தமுத . . .

7 . . . . இதற்குத் தலைமாறு விட்டு இக் குகைக்கு மேற்குபட . . . தர சோழ . ந்தர சோழ . . . .

8 இக்குகைக்கு சேஷமாக கூட்டின **ப்ரஹ்ம**தேயம் திருவீழிமிழலை ஊர் நத்தத்து மேல் கண்டத்து மேற் கடைந்த குழியில் . . . க்கடைய குழி ௬௰ நீக்கி இதன் தெற்கு

9 ஆண்டராந . நல்லிசை ஞானசம்பந்தர் விலை கொண்ட **கவு**தமன் தில்லை மூவாஇர நம்பி பக்கல் மாடிலன் கோலப்பிரான் பட்டர் பேரில் விலை கொண்ட குழியில் பிரிவர்த்தனை பண்ணின குழி ௰௫ம் **கவு**தமன் திருச்சிற்றம்பலமுடையான் **ப**ட்டன் ஸபையார் பக்கல் ஆண்டார் [வளைத்த] மூலவர் விலை . . . கொண்டு இவர் பக்க

10 ல் விலை கொண்ட ஆண்டார் எண்ணாடார் பக்கல் விலை கொண்ட குழி ௰௫ம் **க**முதமன் திருவிசலூர் உடைய பிரான் **ப**ட்டரும் இவர் தம்பி திருவரங்க முடையான் பட்

11 டரும் இவர் தம்பி ஆளுடை பிரான் **ப**ட்டரும் இவர் தம்பி திருவெண் காடுடையான் சன்மனும் பக்கல் கவுனியன் கோலப்பிரான் பட்டர் பேரில் விலை கொண்ட குழி ௪௰ம் ஆக கு[ழி]

12 ௭௰ இக்குழி[யும்] ஆண்டார் நல்லிசை ஞானசம்பந்தர் **ஸ**ந்தானத் தா[ர்*]கு இக்குகை :-

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 12 - ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	94
மனன்ன் :	மூன்றாம் குலோத்துங்க சோழன்		

இடம் : *திருவீழிநாதர் கோயில் மூலநாதர் சன்னதி தெற்குச் சுவர் மீது உள்ளது.*

குறிப்புரை: *திருவீழிமிழலை உடையார் கோயிலில் உள்ள ஆண்டார் ஒருவர் கோயிலின் வடக்கில் மடவிளாகத்தில் மாகேஸ்வரர்களுக்கு திருநாவுக்கரைசு என்ற பெயரில் குகை ஒன்று எடுப்பதற்காக மனை வாங்கும்போது தன் பெயரிலும் திருவீழி மிழலை உடையார் [சிவன்] பெயரிலும் நிலம் வாங்க இயலாத காரணத்தினால் [ஒண்ணாமையால்]வாதுசெய் வாரணநம்பி [ஞான சம்பந்தர்] பேரில் பலரிடம் நிலம் விலைக்கு வாங்கிய செய்தி கூறப்பட்டுள்ளது.*

இக்குகை மாஹேஸ்வரர்களுக்கு சேமமாக எடுக்கப்பட்டது என்றும் அவர்களே நிரந்தரமாக எழுந்தருளியிருத்தல் வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு .

1 **ஸ்வஸ்திஸ்ரீ** திரிபுவனசக்கரவத்திகள் மதுரையும் கொண்டு பாண்டியனை முடித்தலை கொண்டருளின சீ குலோத்துங்க சோழ தேவர்க்கு [யாண்டு . . . . உய்]

2 **யக் கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு உடையார் திருவீழிமிழலை உடையார் கோயில் கும்பிட்டு இருக்கும் ஆண்டார் நல**

3 . . . . திருநாவுக்கரைசென்னுந் திரு ந[ாம]த்தால் **சீமாகேஸ்**
வரற்கு குகை எடுக்க ஆனைமூர் தேவர் பக்கல் காசு வாங்கியும் தம்முடைய **ஆத்யாமிட்டு**

4 மூலையில் இறையிலி ஊர் நத்தத்து கொட்டக காப்பாழில் கீழ் கண்டத்தும் மேல் கண்டத்தும் உடையார் கோயில் வடக்கில் திருமடை வளாகத்

5 து மேலை எல்லைக்கு மெற்கு இவ்வாண்டார் தம் பேரால் விலை கொள்ள ஒண்ணாமையிலும் உடையார் திருவீழிமிழலை உடையார் திருநாமத்து விலை

6 கொள்ள ஒண்ணாமையாலும் சீபண்டாரத்து இவ்வாண்டார் காசொடுக்கி வாதுசெய் வாரண நம்பி பேரில் விலை கொண்டு உடையார் திருநாளது திரிவிட்டு திருநாமத்து விசத்

7 தால் பரிவத்தனை பண்ணின ஆரிதன் பொற்கோயில் நம்பியும் ஆரிதன் திரு நட்டப் பெருமாளும் குழி ௩௰ம் **கவு**தமன் திருவரங்க நாராயண பட்டநும் [கவு]தமன் **சூரியதேவ**

8 ஆட்கொண்ட நாயக பட்டநும் குழி உ௰ம் ஆக உடையார் திருநாமத்து பரிவத்தனை பண்ணின குழிக்கு சீகாரியம் மயிலாப்பூருடையாநும் **சீமாஹேஸ்**வரக் கண்காணி ஆண்டார்

9 தேவராண்டார் க[ணக]மாதவாண்டாரும் தேவகன்மி ஆலால சுந்தர பட்டநும் கோயில் கணக்கு **மத்யஸ்தன்** திருவீழிமிழலை உடையாந் திருவையாறு தேவனான ஐநூற்றுவ அந்த

10 ணப் பிரியநும் வேட்கோவன் திருவீழிமிழலை உடையாந் பிச்சன் மிழலை தேவத்திரன் பிச்சனா

11 ன ஐநூற்றுவ அந்தணப் பிரியநும் மற்றும் . . . . முத்தி [வே]ண்டுவாரும் எழுத்திட்ட பரிவத்தனைப் பிரமாணப்படி குழி ௰௫ம் பலர் பக்கலும் விலை கொண்டு கூ

12 ட்டின வாது செய்வராண்டார் பேரில் விலை கொண்ட **கவு**தமன் **வீ**ற்றிருந்தான் உமையாண்டாந் பட்டந் குழி ௰௩வசும் ஒலோச்சியன் நாந தேவன் உய்ய கொண்டான் ப

13 ட்டந் பேரில் விலை கொண்ட **கவுதமன் சுப்ரம**ண்ணியந் சிறியாண்டாந் பட்டந் குழி மரூஉப **கவுதமன்** தில்லைக்கரைசு திருவிசலூர் பட்டன் உள்ளிட்டார் குழி எயஅ **கவுதமன்** ம

14 ஹாதேவன் சீரங்கநாதபட்டன் குழி மிரு ப்பாடியார் உய்யக் கொண்டான் கோலப்பிரான் பட்டன் பேரில் மேல் கண்டத்து **கவுதமன்** தில்லைக் கரைசு திருவிசலூர் பட்டன் உள்ளிட்டா

15 ர் பக்கல் விலை கொண்டு கிழவன் பத்தூரான் பொது நிலத்து விசத்தலைப் பரிவத்தனை பண்ணின குழிக்கு ஊர்க்கணக்கு வேட் கோவன் திருவீழிமிழலை உடையாந் பிரான் மிழ

16 லை வேந்திரன் ஐனூற்றுவயந்தண வேளாநும் . . . . உலோச் சியன் திருவனந்தீசன் திருநீலகண்ட பட்ட **சோமயாசி**யாரும் வாச்சியன் **சபாபதி பட்ட**நும் வாச்சியன் மஹா

17 **தேவ பட்ட**ந் உள்ளிட்டார் எழுத்தி[ட்டு குடுத்தது] பரிவத்தனை **ப்ரமாண** படி குழி . . . ஆகத் திருநாவுக்கரை சென்னும் திருநாமத்தால் எடுத்த குகையும் புழைக்கடையும் [நடு]

18 வார் ருயநிருசசம் சீமா**ஹேஸ்வ**ரர்க்கு இவ்வாண்டார் . . . . ஞானசம்பந்தர் சீ**மாஹேஸ்வ**[ர*]ர்க்கு சந்திராதித்தவரை **மாஹேஸ்வ** ரற்கோய் **சேம**மாக கொண்டுவிட்டது

19 இக்குழி இருநூற்றை . . . . கொண்டு இக்குகையில் நிரந்தரத்து எழுந்தருளி இருக்கும் மா**ஹேஸ்வ**ரரே அபூர்வி எழுந்தருளின

20 மா**ஹேஸ்வ**ரக் கணக்கு . . . . திருவமுது இக்கோயில் தச்சா சாரியக்காணி உடைய **சம்**வதி நல்தத்தன் ஆண்டான்

21 . . . . இவை என் எழுத்து

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : நன்னிலம்
ஊர் : திருவீழிமிழலை
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கி.பி. 10 - ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் :

இடம் : திருவிழிநாதர்கோயில் மாப்பிள்ளைசாமி பீடம், பக்கவாட்டில் உள்ள கல்மீது உள்ளது.

குறிப்புரை : சிதைந்த துண்டுக் கல்வெட்டு.

கல்வெட்டு :

1 ஸ்ரீ சில்ல முடையா
2 உதைய மாத்தாண் . . .
3 . . . . வனற்றுகை அடவி . . .
4 . . . . சிகை இடையம . . . .
5 . . . . ல் ஆச்சன் அறி . . . .
6 . . . . . வேளானான செய . . . .
7 வனெய் இச்சொ . . .
8 ம் இது . . . . .
9 ப்பிரிவு கீழ் ருகூ . . .

10 ப் பொத்தகப் படி

11 இந் நடுவு பட்ட நில . . . .

12 காலின் தெற்க்கும் . . . .

13 [கி]ழக்கும் உள்வாய்ச் . . . .

14 டும் நிலத்துக்கு இ . . . .

15 [எ]ன்று பெர் கூவப்ப . . . .

16 கும் சோழ வேளானெ . . . .

17 ான் நிலத்தின் வடக் . . . . . .

18 னதமர்க்கும் குடிமக

19 ற இழிச்சின நிலத்தி . . . . .

20 . . . மொ . . . .

21 ை . . .

22 . . . .

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : நன்னிலம்
ஊர் : திருவீழிமிழலை
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கி.பி. 12, 13ம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 96

இடம் : திருவீழிநாதர் கோயில் வடக்குப் பிரகாரத்தில் உள்ள மகாலிங்கசுவாமி சந்நதி கோகமுத்தில் உள்ளது.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு.

1 தலிந்த ஸ்ரீ
2 நல்லாவூர் ஆந
3 மதுராந்தக . . . .
4 . . . எதிரிலிசோழப்பி . .
5 [ப]ல்லவரை . . . . தன்ம
6 . . . .

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : நன்னிலம்
ஊர் : திருவீழிமிழலை
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு :
வரலாற்று ஆண்டு : 18, 19-ம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன்பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 97

இடம் : திருவீழிநாதர் கோயில் இரண்டாம் கோபுரம் வடபுறச்சுவர் மீது உள்ளது.

குறிப்புரை : கூந்தலூரரைச் சேர்ந்த எல்லப்பர் என்பவருடைய மகன் நாகப்பன் இவ்வடபுறச் சுவரைக் கட்டித் தந்ததைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1 கூந்தலூர் எல்

2 லப்பர் புத்ரன் நா

3 கப்பன் சதா

4 சேர் வை உ

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு	—
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு	—
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	—	ஊர்க் கல்வெட்டு எண்	98
மன்னன் :	—		

இடம் : திருவீழிநாதர் கோயில் இரண்டாம் கோபுரம் வடபுற நிலையில் உள்ளது.

குறிப்புரை : சிதைந்த துண்டுக் கல்வெட்டு

கல்வெட்டு :

1 . . . .

2 . . . .

3 . . . .

4 . . . . ஹேஸ்வ

5 . . . க்கட . . . .

6 . . . .

7 . . . . . ஙகர மத

8 . . . .

9 . . . .

10 . . . .

11 . . . . ருளா நின்ற

12 . . . .

13 . . . . மெல் செல்லா நி . . .

14 ன்ற . . . . **சபை** . . . .

15 தனு நாயற்று சூ . . . .

16 . . . . . றைமை . . . .

17 . . . . புதன் வாரமும் செ

18 . . . . வொதிலா . . .

19 . . . . கொண்டப் . . . .

20 . . . . விண்ணாட்டு

21 . . . .

22 . . . . டையநா . . . . .

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 11-ம் நூற்றாண்டு
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	99
அரசு :	—		
மன்னன் :	—		

இடம் : திருவீழிநாதர் கோயில் இரண்டாம் கோபுரம் தென்புற நிலையில் உள்ளது.

குறிப்புரை : சிதைந்த துண்டுக் கல்வெட்டு. நாட்டார்கள் சில வரிகளை கோயிலுக்கு இறையிலி செய்து கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 . . . . . பன்ம . . .

2 . . . . . வத்தி

3 . . . தாயார் . .

4 குமரன் . . .

5 ண்டு கற்க . . .

6 . . . . பூர்வ . . . .

7 . . . . . யார் . . . .

8 முதலு . . . .

9 . . . .

10 அத்தத்து . . .

11 யார் திருவீழிமிழலை . . .

12 நாயனார் உய்யக்

13 கொண்டார் . . . . .

14 . . . நாட்டாரோம் இறையி

15 லி விட்ட பரிசாவது இன்நாய

16 னார் திருமடை விளாகத்து

17 திருநாமத்துக் காணி தெவத

18 ானத்து இருக்கும் செட்டிக

19 ள் பட்டடை . . . . . கடமை

20 . . . . . . சக்கர . . . .

21 . . . . . யார் தட்

22 டார் பாட்டம் செர்ப

23 டுங் கண்ணாக வார்குடி

24 கன்னார் கல்லாயம் மற்று உ

25 ள்பட்ட பற்றடை ஆயத்

26 திலும் முதலான முதல் ந

27 . . . . லெ விழுக்காடு கொ

28 ண்டு பூசைக்கும் திருப்ப

29 [ணிக்கு]ம் உடலாக இறையிலி

30 யாக சந்திராதித்தவா[ற]

31 யும் நிற்க விட்டொம்

32 இவை வங்கி புறத்து . . . .

33 . . . . மபட்டன் எழுத்து

34 . . தெவபட்டன் எழுத்து

35 அம்பலக் கூத்தபட்டன் எழு

36 த்து புதுச்செரி உடையார்

37 எழுத்து மாம்பாக் கிழான்

38 எழுத்து கொலியப் பா

39 டி உடையான் எழுத்து

மாவட்டம் :	தஞ்சாவூர்	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	நன்னிலம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 18, 19 - ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவீழிமிழலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	236 / 1938 - 39
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	—	ஊர்க் கல்வெட்டு எண்	100
மன்னன் :	—		

இடம் : திருவீழிநாதர் கோயில் மடப்பள்ளி கிணற்றின் அருகில் துணி துவைப்பதற்குப் பயன்படுத்தப்படும் கல் மீது உள்ளது.

குறிப்புரை : சூலம் பொறிக்கப்பட்டுக் காணப்படும் கல்லில் உள்ள இக்கல்வெட்டில் திருவீழிநாத சுவாமிக்கு மாலை (சாயரட்சை) வழிபாடு செய்வதற்குத் தருமமாகச் செவந்திநாதபுரம் ஊரார் நிலம் கொடுத்த செய்தியும், அந்நிலத்திற்கு எல்லைகளும் கூறப்பட்டிருக்கின்றன. கொடுக்கப்பட்ட அந்நிலத்தில் இலுப்பையும், தென்னையும் வைத்து வளர்க்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. கல்லில் சூலம் பொறிக்கப்பட்டிருப்பது சிவன் கோயிலுக்குக் கொடையளிக்கப் பெற்றதைப் புலப்படுத்துவதாகும்.

கல்வெட்டு

1 உ தாது ரு வைய்

2 [க]ாசி மீ ௰௫ உ சோமவார னா[ள்]

3 ரேவதி நசட்ற்றில்* மிழலை வீழிநா

4 தசுவாமி இசாய ரெசைட்** கட்டளை தறும

* ரேவதி நட்சத்திரம் என்று படிக்கவும்

** 'ரெட்சை' என்றிருத்தல் வேண்டும்

5 த்துக்கு இசெவந்தினாதபுரம்* ஊரவர் தறும

6 சாதநம் பண்ணி குடுத்தபடி ஆசந்த

7 ாற்க்கம் எல்லை பழைய நத்தத்துக்கு கிழக்கு

8 தண்டு முறிச்ச பிள்ளையார் கோவி

9 லுக்கு மேற்க்கு அரசலாற்றுக்கு தெற்க்கு நடப்

10 பு கரைக்கு வடக்கு இதின்னாங் கெல்லை

11 க்குள் பட்ட நிலத்தில் இலுப்பை தென்ன

12 ம் பிள்ளை வைச்சு ஆளாக்க வி

13 டுகிறபடியிநாலே சந்திராதித்த

14 வர் உள்ளவரைக்கும் தற்மம் அனு

15 பவித்து கொள்ளுதற்து இதுக்கு

16 விகாதம் பண்ணின பேர் சிவெ

17 தாரகத்திலே** போக கடவொர[ா*]க

18 வும்

---

* செவந்தினாதபுரம்

** சிவதுரோகத்திலே

மாவட்டம் : தஞ்சாவூர்
வட்டம் : நன்னிலம்
ஊர் : திருவீழிமிழலை
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : சகம்-1732 கலி-4911, கி.பி. 1810
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 101

இடம் : திருவீழிமிழலை கீழத்தெரு தேர் முட்டி மேல் சுவரில் பதிக்கப்பட்டுள்ள கல்லில் உள்ளது.

குறிப்புரை : திருவீழிநாதசுவாமியின் தேர் நிற்குமிடத்தில் தேர் மேட்டு மண்டபம் என்ற மண்டபத்தை சிவப்பினாச்சியார் என்ற பெண்மணி செய்தளித்திருக்கிறார் என்பதும் இவர் பழியஞ்சிய நல்லூர் ராமலிங்க நயினாருடைய குமாரியும் திருவீழிமிழலை புதுச்சேரிக் குடையார் கோத்திரத்தில் அவதரித்த வீழிநாத நயினாருடைய மனைவியும், ராமசுவாமி நயினாருடைய தாயாரும் ஆவார் என்பதும் குறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாற்

2 தம் ௲எ௱௩௰௨ கலிய் யுத்த

3 ம் ௵ சதசூ௱௰௧ இதன் மேற் செல்

4 லா நின்ற பிறமோதூத ௵ புரட்

5 டாசி மீ‍ ௨௰௩ ஸ்ரீ வீழினாத சு

6 வாமியார் தேர் மேட்டு மண்டப

7 ம் செய்வித்தது பழியஞ்சிய ந

8 ல்லூர் ராமலிங்க நயினாருடை

9 ய குமாரி திருவீழிமிழலைப் புதுச்சே

10 ரிக் குடையார் கோத்திரத் தவதரி

11 த்த வீழினாத நயினாருடைய ஸ்த்ரீ

12 ராமசுவாமி நயினாருடைய தாயா

13 ர் சிவப்பினாச்சியார் தற்மம்

14 சிவமயம் **சுபமஸ்து :-**